# செம்பதாகை

சமூக அரசியல் ஆய்வு இதழ்



www.padippakam.com

# செம்பதாகை
*************

வலம் - 01
பதாகை - 02 சமூக அரசியல் ஆய்வு இதழ் டிசம்பர் 1991

உள்ளே ..............

| | பக்கம் |
|---|---|
| 1. நம்பிக்கையுடன் முன்னெடுப்போம் | 1 - 3 |
| 2. சோவியத் யூனியனும் சோஷலிசமும் - சிறிதரன் | 4 - 10 |
| 3. க்ருஷ்சேவ் முதல் கொர்பச்சேவ் வரை | 11 - 24 |
| 4. கிழக்கு ஐரோப்பிய மாற்றங்களும் சோஷலிச எதிர்காலமும் - சி. சிவசேகரம் | 25 - 32 |
| 5. சோஷலிசத்தின் சாதகங்களும் பாதகங்களும் - கீரன் | 33 - 47 |

## அடுத்த இதழில்

1. இன விடுதலையும் வர்க்கப் போராட்டமும்
2. தேசிய ஜனநாயகமும் சுயநிர்ணய உரிமையும் - ஒரு நோக்கு
3. அமெரிக்க செல்வந்தர்களும் - ஆயுத விற்பனையும்
4. சீனாவின் ஜனநாயகமும் எதிர்கலமும் - கீசனின் ஒரு பேட்டி

## பேராசிரியர் க. கைலாசபதி

மறைந்த பேராசிரியர் க. கைலாசபதியின் 9 வது நினைவு தினம் டிசம்பர் 6 ம் திகதியாகும். இருபதாம் நூற்றாண்டின் தமிழ் இலக்கியத்துறைக்கு தனித்துவம் மிக்க உயர் பங்களிப்பினை வழங்கிச் சென்றவர் கைலாசபதி. அவர் இலக்கியத் துறையில் குறிப்பாகவும், ஏனைய சமூகத்துறைகளில் பொதுவாகவும் பதித்துச் சென்ற ஆழமான முத்திரைகள் அவரது விஞ்ஞானபூர்வமான சமூக நோக்கினையும், சமூக சார்பினையும் எடுத்துக் கூறுபவைகளாக விளங்குகின்றன. அவற்றினை தக்க முறையில் சமூக நலன்களுக்கு பயன் படுத்துவது அவசியம் எனக் கூறி "செம்பாதகை" கைலாசபதியை நினைவு கூர்கின்றது.

( ஆ. ர் )

தொடர்புகட்கு
சோ. தேவராஜா
"செம்பாதகை"
43, வன்டவெற் பிளேஸ்
தெகிவளை.

S. Thevarajah
Sembathagai
43, Vandervert Place
Dehiwala,
Sri Lanka

விலை ரூபா 25/-

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com


<u>நம்பிக்கையுடன் முன்னெடுப்போம்!....</u>

நாட்டின் பொருளாதார அரசியல் சமூக கலாச்சார, கல்வித் துறைகள் அனைத்திலும் பிரச்சினைகள் புதிய கட்டத்தை அடைந்துள்ளன. அவை பெரும் நெருக்கடிகளாகவும் உருவெடுத்துள்ளன. ஏற்கனவே தேசிய இனப் பிரச்சினை யுத்த நிலைக்கு [illegible] கொண்டு செல்லப்பட்டு கடுமையான இரத்தம் சிந்தலுக்கு இலக்காகி உள்ளது. இவை யாவற்றிலும் ஆளும் தரப்பினரால் ஆளப்படும் வகுப்பினர் என்னும் பிரதான பிரிவு துலக்கமடைந்துள்ளது. மக்களின் அன்றாட வாழ்க்கை நிலைமைகள் தொட்டு ஜனநாயகம், சுதந்திரம் மனித உரிமை வரை யாவும் சிதைக்கப்பட்டு மீறல்களுக்கும் மிரட்டல்களுக்கும் மறுத்தல்களுக்கும் ஆளாக்கப்பட்டுள்ளன.

இவை யாவற்றையும் தட்டிக் கேட்க முற்படும் மக்கள் சார்பான பலதரப்பட்ட குரல்கள் வெளிவராத வாறு நாளாந்தம் ஒடுக்கப்படும் அபாயம் அதிகரித்தும் வருகின்றன. பயங்கரவாதம், நாசகாரம், தேசத்துரோகம் போன்ற பெயர்களில் சமூக நீதிக்கான கோரிக்கைகள் நிராகரிக்கப்படுகின்றன. அதேவேளை ஆளும் தரப்பினரைப் புனிதர்களாகவும், இரட்சகர்களாகவும் காட்டி மக்களிடையே மாயைகள் பரப்பப்படுகின்றன. நிறைவேற்று அதிகாரம் கொண்ட தற்போதைய தலைவர் நிகரற்ற ஒரு மாமனிதர் என்றும் எந்த சக்தியாலும் அவரையும் அவரது ஆளும் தரப்பினரையும் அசைத்து விட முடியாது என்னும் தோற்றம் கட்டியெழுப்பப்பட்டு வருகிறது. இந்த வகையில் தொடர்பு சாதனங்கள் மட்டுமன்றி மெத்தப்படித்த 'புதிய சிந்தனைப் புத்திஜீவிகள்' எல்லோரும் ஆளும் தரப்பினரை நியாயப் படுத்தி அநீதிகளுக்குத் திரையிட்டும் வருகின்றனர்.

அதே வேளை ஆளும் அதிகார சக்திகளை எதிர்த்து நிற்க வேண்டிய மக்கள் சார்பு சக்திகளிடையே தெளிவீனங்களும், பலவீனங்களும் காணப்படுகின்றன. மக்களுக்கு மாற்றம் தேவைப்படுகின்றது. மாற்றத்திற்கான நியாயமான செயற்பாடுகளுக்கும் மக்கள் தயாராக உள்ளனர். அதன் வெளிப்பாடுகள் ஏற்கனவே ஓரிரு சந்தர்ப்பங்களில் வெளிப்படவும் செய்தன. ஆனால் அத்தகைய மக்களுக்கு உரிய உறுதியான தலைமை வழங்கப்படுவதில் தயக்கங்களும், தாமதங்களும் காட்டப்படுகின்றன. எதிர்கால அதிகாரம், பதவி, கட்சி அரசியல் செல்வாக்கு போன்ற குறுகிய வட்ட நோக்கங்கள் பரந்த மக்கள் நலன்கள் அபிலாசைகளுக்கு மேலால் தலைநீட்டி நிற்கின்றன. இப்பாதகமான பலவீன அம்சங்கள் விரைவாகவே சாதகமான பலமானதொன்றாக மாற்றியமைக்கப்பட வேண்டும் அதன் அவசியத்தையே மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

சர்வதேச ரீதியிலும் மற்றும் உலக நாடுகளின் மக்கள் முன் ஏகாதிபத்திய மேலாதிக்க சக்திகள் மிகப் பெரும் பலசாலிகள் போலவும் தமது பொருளாதார அரசியல் ஆணைகளை ஏற்றேயாக வேண்டும். என்ற மமதை மிக்க தோரணையிலும் முன்னெழுந்து நிற்கின்றன.

படிப்பகம்

www.padippakam.com



கிழக்கு ஐரோப்பாவில் இடம் பெற்ற மாற்றங்களும், வளைகுடா யுத்தமும், சோவியத் தலைமையின் துரோகத்தினால் ஏற்பட்ட சோஷலிசச் சீரழிவின் இறுதி நிகழ்வுகளும் இவ் ஏகாதிபத்திய மேலாதிக்க சக்திகட்கு ஒரு தற்காலிக 'அசுரத் தோற்றத்தை' வழங்கியுள்ளன. இத்தகைய நிலைவரலாற்றில் தோன்றியிராத ஒன்றல்ல. முதலாளித்துவ ஏகாதிபத்திய சக்திகள் தத்தமது அழிவுகளுக்கு முன் இவ்வாறு தோற்றமளிப்பது நியதிக்கும், நிபந்தனைக்கும் உட்பட்டதேயாகும்.

தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் பலம் மிக்கவர்களாகத் தோன்றும் மேற் கூறிய ஆளும் அதிகார மேலாதிக்க ஏகாதிபத்திய சக்திகள் விரைவாகவே குமுறியெழும் மக்கள் போராட்டங்களினால் முறியடிக்கப்படுவார்கள். அதற்குரிய பன்முக முயற்சிகள் கருத்தியல் அடிப்படையிலும் அமைப்பு ரீதியிலும் நடைமுறைகள் வாயிலாக முன்னெடுக்கப்படல் வேண்டும். அதன் மூலம் மக்கள் சார்பான இயக்கங்களும் போராட்டங்களும் தற்போதைய தேக்க நிலையில் இருந்து அடுத்த கட்டப் பாச்சல் நிலைக்கு மாறமுடியும். அதற்குரிய சூழலைத் தெளிவுடனும் நம்பிக்கையுடனும் உருவாக்க உரிய சக்திகள் முன்வர வேண்டும்.

தேசிய ரீதியிலும் சர்வதேச நிலையிலும் மாக்சிச லெனினிச தத்துவத்திற்கும் சோஷலிச கருத்துக்களுக்கும் பின்னடைவும், பலவீனமும் ஏற்பட்டுள்ளமை மறுப்பதற்குரிய தொன்றல்ல. ஆனால் அப்பின்னடைவும், பலவீனமும் அத்தத்துவத்தின் போதாமையினால் அல்லது பொருந்தன்மையினால் ஏற்பட்டதொன்றல்ல. அதனை நடைமுறைப்படுத்திய தவறுகளைத் திருத்தித்தவறிய வளர்ச்சியடைந்த புதிய நிலைமைகளுக்கு ஏற்ப மாக்சிச லெனினிசத்தைப் பிரயோகிக்கத் தவறிய தலைமைகளின் இயலாமையின் பாற்பட்டதேயாகும்.

'முதலாளித்துவம் ஏற்கனவே தோல்வி கண்டு விட்டது, தற்போது சோஷலிசமும் தோல்வியடைந்து விட்டது. ஆதலால் மூன்றாவது பாதை ஒன்று தேடப்பட வேண்டும்' என்று கூறும் புதிய தத்துவத்தரிசனம் தேடுந் வித்தகர்கள் சிலர் அடிப்படையில் குழப்பகரமான கருத்துக்களை விதைத்து நம்பிக்கையீனங்களை வளர்க்க முனைகிறார்கள். அரட்டல் விமர்சனங்களும், அரைவேக்காட்டு தத்துவ நிர்ணயங்களும் சமூக நீதிக்காகப் போராட வேண்டிய [illegible] எதிரிகட்கு உதவி நண்பர்களுக்குத் தீங்கு விளைவிக்கவே உதவக் கூடியதாகும்.

படிப்பகம்

www.padippakam.com



ஆதலால் நமது சமூக முரண்பாடுகளை ஒரு விஞ்ஞான பூர்வமான தத்துவ நோக்கிலே ஆராய்ந்து அவற்றினால் தோன்றியுள்ள அரசியல் சமூக நிலைமைகளை மக்களுக்கு எடுத்து விளக்கி, பிரதான எதிரியை அடையாளம் காட்டி அதற்கு எதிரான தலைமைசக்திகளை முன்தள்ளி அவற்றுடன் இணையக் கூடிய நட்பு சக்திகளுக்கு நம்பிக்கை அளிப்பது மக்களை அணி திரளச் செய்யும் பணியே இன்றைய அவசரப் பணியாகும். இதனை சிந்தனைத் தெளிவுடன் எவ்வித வித்தகச் செருக்கின்றியும் நம்பிக்கை மிகுந்த துணிவுடனும் முன்னெடுத்து செல்லல் வேண்டும். அதனை பலமுனை நெருக்கடிகளில் மத்தியிலும் முன்னெடுப்போம்.

15.12.91 ஆசிரியர் குழு.

இவ் இதழ் பற்றி!

செம்பதாகையின் இவ் இரண்டாவது இதழ் சர்வதேச முக்கியத்துவம் மிக்க விடயங்களை உள்ளடக்கியதாக வெளிவருகின்றது. பிரதானமாக சோஷலிசம் பற்றியும், சோவியத் யூனியனின் இறுதி நிகழ்வுகள் பற்றியும் கட்டுரைகள் எடுத்துக் கூறுகின்றன. அண்மைக்காலத்தில் எழுதப்பட்ட இக் கட்டுரைகளின் முக்கியத்துவம் கருதி ஒரே இதழில் அவற்றை வெளியிடுகின்றோம். மேலும் இவ் இதழில் சீனக் கல்வியாளர் சீசின் அவர்கள் வழங்கிய சோஷலிசம் பொருளாதாரம் பற்றிய முக்கிய பேட்டியும் வெளிவருகிறது. வாசகர்களின் அபிப்பிராயங்களையும் செப்புாதகை எதிர்பார்க்கின்றது.

(ஆசிரியர் குழு)

படிப்பகம்

www.padippakam.com


# சோவியத் யூனியனும் சோஷலிசமும்

1.

சிறீதரன்

சோசலிசம் என்பது செல்வத்தை சமபங்கீடு செய்தல் - சகலருக்கும் சம சந்தர்ப்பம் அளித்தல் என்று பொருள்படும். முதலாளித்துவ அமைப்பில் வருவாயை மட்டுமே சமபங்கீடு செய்வார்கள் - வறியவர்களுக்கு - பெரிய இனம் இனம் சிறிய இனத்தை அடக்கியொடுக்கிச் சூறையாடும், பெரிய நாடு சிறிய நாட்டை சூறையாடும். இந்த நடைமுறைக்கு உதாரணத்தை தேடி அலைய வேண்டியதில்லை. இலங்கையும் இந்தியாவும் ஏனைய நாடுகளும் உதாரணங்களாக அமைகின்றன.

சோவியத் மக்கள் சோசலிசத்தை லெனின் ஸ்ராலின் போன்ற மாபெரும் புரட்சித் தலைவர்களின் தலைமையில் கட்டியெழுப்பும் போது பின் தங்கிய நிலையில் இருந்த ஒரு நாட்டை சக்திமிக்க கைத்தொழில் நாடாக் உருவாக்கினார்கள். அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக உலகின் சக்திமிக்க நாடாக சோவியத் யூனியன் வளர்ந்தது. அந்த நாடு வெளிநாட்டவரின் நிதியுதவியெல்லாமல் சொந்த முயற்சியில் அளப்பரிய சாதனைகளைப் புரிந்து, சோஷலிசத்தைக் கடைபிடித்து வந்த வேளையில் அந்த நாடு பிற நாடுகளைச் சுரண்டவும் இல்லை, மிரட்டவும் இல்லை.

இதன் காரணமாகவே அடக்கியொடுக்கப்பட்ட தேசங்கள் சோவியத் நாட்டை உன்னத நிலையில் வைத்து மதித்தன. சோவியத் யூனியனின் சாதனைகளைப் தமது விடுதலைக்கு உந்து சக்தியாகக் கொண்டனர். பல்வேறு தேசங்கள் விடுதலையடைவதற்கு சோவியத் யூனியனின் அபார செல்வாக்கு ஒரு பிரதான புறக்காரணியாக அமைந்தது என்பதை இன்று ஜனநாயகம் பற்றிப் பிதற்றுபவர்கள் நினைவிற் கொள்ள வேண்டும். ஒரு சோஷலிச நாடான சோவியத் யூனியனிலே மட்டுமே ஒரு சிறுபான்மை இனத்தவரான ஸ்டாலின் (ஜோர்ஜிய இனம்) - லெனின் காலத்தில் அவரது வலது கரமாகவும் லெனின் மரணத்தின் பின் இந்த நாட்டின் உன்னத தலைவராகவும் வர முடிந்தது. அவரது தவறுகள் அவரது சாதனைகளைவிட எத்தனையோ மடங்கு குறைந்தவையுமாகும்.

இன்று ஜனநாயகம் பேசுவோர் இரண்டாவது உலகயுத்தத்தின் போது ஒப்பற்ற தலைவர் ஸ்டாலின் தலைமையிலான சோவியத் மக்களும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியும் வகித்த பாத்திரத்தை மறந்துவிட்டார்கள். ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் சரித்திரம் கற்றவர்களுக்கு இதை நாம் நினைவூட்டக் கடமைப்பட்டுள்ளோம். ஒன்றன்பின் ஒன்றாக நாடுகளைப் பிடித்து முன்னேறிச் சென்று கொண்டிருந்த கிட்லரின் படைகளைத் தோற்கடித்து உலகை அழிவிலிருந்தும் அடக்குமுறையிலிருந்தும் காப்பாற்றியதில் ஸ்டாலின் தலைமையிலான சோவியத் யூனியன் ஆற்றிய பங்கு மகத்தானது. இதை மேற்கு நாடுகளில் சரித்திரம் கற்றவர்களால் கொச்சைப் படுத்தவோ மறுதலிக்கவோ முடியாது.

படிப்பகம்

www.padippakam.com

1917 ஒக்டோபர் புரட்சி வெற்றிபெற்றதும் அதை சகிக்க முடியாத வின்சன்ட் சேர்ச்சில் "தொட்டிலிற்குள்ளேயே"குழந்தை"யை நெரித்து கொல்ல வேண்டுமெ வேண்டுகோள் விடுத்தார். ஒன்றன்பின் ஒன்றாக ஊடுருவல்கள் சதிகள், பொருளாதாரத் தடைகள் யாவும் படு தோல்வி யடைந்தன. சோஷலிசம் வெற்றி பெற்றது.

இரண்டாவது உலகயுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னரே பாசிசத்திற்கு எதிராக ஒரு பரந்த ஐக்கிய முன்னணியை அமைக்கும் முயற்சியில் ஸ்டாலின் ஈடுபட்டிருந்தார். ஆனால் மேற்கு நாடுகளோ ஸ்டாலின் முயற்சிக்கு ஆதரவு தரத் தயங்கினர். அவர்களின் கணிப்பின்படி அவர்களும் கிட்லருடன் சேர்வியத் யூனியன் மோதிப் பலவீனமாக்கியிருக்கும் வேளையில் யூனியனையும், கிட்லரையும் தோற்கடிக்க முடியும் என்பதேயாகும். இதைத் தெளிவாகப் புரிந்து கொண்டபின் இனிமேலும் தாமதிக்க முடியாது என்ற நிலையில் சோவியத் யூனியன் ஜேர்மனியுடன் ஒரு தற்காலிக பாதுகாப்பை பலப்படுத்துவதற்கு இந்தக்காலப்பகுதியை ஸ்டாலின் பயன்படுத்தினார். இந்தக் காலப்பகுதியிலும் கிட்லருக்கு எதிரான அணியொன்றின் அவசியத்தை வலியுறுத்திவந்தார்.

கிட்லர் சோவியத்தை தாக்கிய போதும் மேற்கு நாடுகள் அந்த நாட்டிற்கு உதவமுன்வரவில்லை. ஸ்டாலின்கிராட் 42 நாட்களாக முற்றுகையிடப்பட்டிருந்தது. உலகெங்கும் உள்ள பிற்போக்குவாதிகள் சோவியத் யூனியன் சீர்குலைந்துவிடுமென சோதிடம் கூறினர். உலகெங்குமுள்ள முற்போக்குவாதிகள் ஜனநாயகவாதிகள் மற்றும் சமாதானம் விரும்பும் சக்திகள் அனைத்தும் இறுதிவெற்றி சோவியத் யூனியனுக்கே என்பதையும், கிட்லரின் பாசிச படைகள் தோல்வியடையும் என்பதையும் திடமாக நம்பினர். அதற்காக பாசிச எதிர்ப்பு இயக்கங்களை முன்னெடுத்தனர்.

சோவியத் யூனியனுக்கு ஆதரவு தெரிவித்தும், கிட்லரின் சகாக்களின் ஆக்கிரமிப்புக்கும் கண்டனம் தெரிவித்தும் உலகெங்கும் கூட்டங்கள் இடம் பெற்றன. அவ்வாறான கூட்டங்களில் ஒன்று கொழும்பில் இடம்பெற்ற போது அதில் பிரதான பேச்சாளராக பீட்டர் கெனமனும் கலந்துசென்ற டாக்டர். எஸ்.ஏ.விக்கிரமசிங்க நாகநாதனும் கலந்து கொண்டனர். கெனமனுக்கு முன்னர் பேசிய டாக்டர் நாகநாதனின் சொற்பொழிவானது மரணச் சடங்கொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுவது போல் இரங்கல் உரையாகவே காணப்பட்டது. சோவியத் யூனியன் தோற்று விடும் என்ற பாணியில் அமைந்திருந்தது. மேடையில் அமைந்திருந்த பீட்டர் கெனமன் இன்றைய் சீரழிந்த பீட்டர் கெனமன் அல்ல) அமைதியற்றுக் காணப்பட்டார். கூட்டத்தில் உரையாற்றும் முறை கெனமனுக்கு வந்தது.

அவரின் பேச்சை ஆவலுடன் எதிர்பார்த்த மக்களுக்கு கெனமன் ஆரம்பத்திலே கூறிவைத்தது இதுதான்.

"நாங்கள் ஒரு மரணச்சடங்கில் கலந்து கொள்வதற்காக இங்கு வரவில்லை. வெற்றிப்பாதையில் முன்னேறி கொண்டிருக்கும் சோவியத் மக்களுக்கு எமது தார்மீக ஆதரவையும் வாழ்த்துக்களையும், தெரிவிப்பதற்கே இங்கு கூடியுள்ளோம்."

படிப்பகம்

நடந்தது என்ன அன்று உலகில் ஒரே யொரு சோஷலிச நாடாக திகழ்ந்த சோவியத் யூனியன் ஸ்டாலின் கிராட் முற்றுகை உடைக்கப்பட்டதாக ஒரு நாள் அறிவித்தது. அதன் பின் செய்தி மேல் செய்தியாக சோவியத் படைகள் சகல முனைகளிலும் முன்னேறிவருவதை அறிவித்தன.

இந்தச்சந்தர்ப்பத்தில் தலைவர் மாவோ ஸ்டாலின் கிராட் முற்றுகை உடைக்கப்பட்டதாக சோவியத் யூனியன் அறிவித்ததீ. இரண்டே தினங்களில் எழுதிய [illegible] இரண்டாவது உலகயுத்தத்தின் திருப்புமுனை என்ற கட்டுரை மிகத் தெளிவான ஒரு பகுப்பாய்வை முன்வைத்தது. அக்கட்டுரையில் தலைவர் மாவோ தனக்கே உரித்தான பாணியில் மிகத் தூரதிருஷ்டியுடன் உலகில் ஏற்படவிருக்கும் மாற்றங்களைக் குறிப்பிட்டிருந்தார். அவர் குறிப்பிட்டது போலவே உலக நிகழ்ச்சிகள் நடந்தேறின, பாசிசத்திற்கு எதிராக ஐக்கிய முன்னணி உருவானது. பாசிசம் தோற்றது பல்வேறு நாடுகள் விடுதலை பெற்றன. சில நாடுகள் சோஷலிசப் பாதையைத் தேர்ந்தெடுத்தன.

நாம் இங்கு அழுத்திக்கூறமுற்படுவதெல்லாம் பாசிசம் தோற்பதற்கு கம்யூனிட்டுக்களின் தலைமையில் சோவியத்யூனியன் ஆற்றிய பங்களிப்பு மகத்தானது என்பதே, அன்று சோவியத் யூனியன் தோல்வி கண்டிருந்தால் விடுதலைப் போராட்டங்கள் யாவும் பின்னடைவுகள் ஏற்பட்டிருக்கும். இன்று சிலர் (முதலாளித்துவ அமைப்புகள்) பாராளுமன்ற ஜனநாயகத்தைப்பற்றிப் பேசுவதற்கான சூழ்நிலை ஏற்பட்டதற்குக் கூட சோவியத் யூனியன் – சீனா போன்ற நாடுகளின் கம்யூனிஸ்ட்டுக்களின் தலைமையில் மக்களின் வீரம் செறிந்த போராட்டமே காரணமாகும்.

உலக சோஷலிச இயக்கத்திற்கு அண்மைக்காலத்தில் சோவியத் தலைவர்களால் செய்த காட்டிக்கொடுப்பால் பெரும் பின்னடைவுகள் ஏற்பட்டபோதும் இறுதிவெற்றி சோஷலிசத்திற்கே என்பதும் சோஷலிசப் பாதையொன்றே சோவியத் யூனியனிற்கும் உலகத்திற்கும் உள்ள பாதை யென்பதை சரித்திரம் நிரூபிக்கும்.

பகிரங்கமாகவே சோஷலிசத்தை கைவிட்டதாக அறிவித்தபின் அந்த நாட்டில் நடைபெறும் சம்பவங்களை அவதானிப்பது அவசியம். ரஷ்யாவின் ஜனாதிபதி பொறிஸ் யெல்ஸ்டின் ரஷ்யசாம்ராஜ்யத்தின் பழைய இலச்சினையை மீண்டும் புகுத்தியுள்ளார். சார் காலத்துக் கொடியால் காணப்பட்ட இரட்டைத் தலைக்கழுகு மீண்டும் வந்துவிட்டது. லெனின் கிராட் சார் காலத்துப் பெயரான சென் பீட்டர்ஸ் பேர்க் ஆக பெயர் மாறியுள்ளது. அரசியல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்ததன் பின் இந்த மாற்றங்களைச் செய்தார்கள் என்று கேட்காதீர்கள். தற்போது சோவியத் நாட்டில் அரசியல் யாப்பு எதுவும் இல்லை. தனது இஷ்டப்படி கட்டளைகளை அவ்வப்போது வெளியிடுகிறார்கள். கடந்த ஆகஸ்டில் கம்யூனிட்டுக்கள் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் முயற்சியின் போது யெல்சினுக்கு ஆதரவாக வீதிக்கு வந்தவர்கள் ஒரு (1%) வீதமக்களே என 'நியூஸ்வீக்' கட்டுரையாளர் ஒருவர் கூறியிருர்.

www.padippakam.com



பழைய சோவியத் யூனியன் சரிந்ததும் யெல்சின் ரஷ்யாவின் பாணியில் அதன் நலனுக்கு இசைந்தவகையில் ஒரு புதிய யூனியனை உருவாக்க முற்படுகிறார். கிரெம்ளின் ரஷ்யாவின் சொத்து " மத்தியின் சொத்தல்ல" என்று ஒலமிடும் யெல்சின் அத்தோடு நின்று விடவில்லை. குடியரசுகள் ரஷ்ய சனத்தொகையின் பெரும் பகுதியை தமக்குள் வைத்திருக்க முற்படலாகாது - எல்லைகள் மீளவரையப் படவேண்டும் என்கிறார்.

இதைக் கேள்விப்பட்ட கசாக்ஸ்தான் ஜனாதிபதி எல்லைகள் மீள வரையப்படு வதென்றால் அது யுத்தம் உள்நாட்டு யுத்தம் என ஆரூடரைத்தார்.

ஒரு கிழமைக்குள் மக்கள் மத்தியில் தலைச்சனம் பிடித்த யெல்சின் விடுதலை வீரன் என்ற நிலையிலிருந்து மிரட்டற் சாரதி விட்டான். 'கம்யூனிஸ் டுகள்' அதிகாரத்தைக் கைப்பற்றும் முயற்சி தோல்வி யுற்றதையிட்டுச் சிலரிடம் காணப்பட்ட ஆனா கலம் போய்விட்டது. சிறுபான்மை இனத்தவர்களிடத்தில் புதிய சந்தேகங்கள் ஏற்பட்டுவிட்டது. "மிகவும் வெட்கக்கேடு - ஆரம்பத்திலேயே நம்பிக்கையின்மைக்கான விதை விதைக்கப்பட்டுவிட்டது" என கசாக்ஸ்தான் ஜனாதிபதி நசார்பாயேவ் கூறுகிறார்.

பதினைந்து குடியரசுகளின் தலைவர்கள் ஒரு புதிய இணைப்புக்கு முயற்சிக் கின்றனர். பெரியதும், செல்வந்த குடியரசுமான ரஷ்யா ஏதாவது புதிய ஏற்பாட்டில் தவிர்க்கமுடியாமலே ஆதிக்கம் செலுத்தும் என்பதில் சந்தேகமில்லை. "குடியரசுகளுக்கு ரஷ்யாதான் அறிவுறுத்தல் செய்யமுடியாது " என லெனின் கிராட் மேயர் அனரோலி சொபசக் கூறுகிறார். இதை அவர்கள் (குடியரசுகள்) உணரவேண்டும்."

மிக்காயல் கோபர்ச்சேவ் தனது மாற்று யோசனையைத் தெரிவித்துள்ளார். அவர் புதிய பாணியில் யூனியன் அல்லது கீரமைக்கப்பட்ட யூனியன் ஒன்றை முன்வைக்கிறார். ரஷ்யக்களின கண்டிற்கு போபர்ச் சேவ் செல்வாக்கிழந்த ..ந்த அரசியல் வாதி - ஆனால் குடியரசுகளைப் பொறுத்தமட்டில் வீராப்பு யெல்சிறுக்கு எதிரான சக்தியாக கோபர்ச் சேவ் காணப்படுகிறார். குடியரசுகளின் அனேகமானவை யெல்சினின் ரஷ்யா வைக்கண்டு பயப்படுகிறார்கள் என்பதை சுப்பிறீம் சோவியத்தின் பிரதிநிதியும் யெல்சினின் சிரேஷ்ட ஆலோசகருமான சேர்ஜி ஸ்டான்கேவிச் ஒத்துக்கொள்கிறார்.

சோவியத்தின் அரசின் வீழ்ச்சி என்பது குடியரசுகள் ஒன்றுக் கொன்று உணவு அப்பப்படுவதை ஒரு வரும் கட்டுப்படுத்தக்கூடியதாயில்லை. மொஸ்கோவில் ஓர் இறுக்கமான அதிகாரம் இல்லாவிடின் குடியரசுகள் தமது பிரச்சினைகளைத் தாமே கவனிக்க வேண்டி யேற்படும். "இது பேரழிவை ஏற்படுத்தும்" என விவசாய நிபுணரான சவ்றிச்சின் எச்சரிக்கிறார். "மேலதிகமானவற்றை ஒரு பகுதியிலிருந்து வேறு ஒரு பகுதிக்கு திசை திருப்பும் மத்திய நிலையம்.

படிப்பகம்

www.padippakam.com



ஒன்றில்லாவிட்டால் உற்பத்தியாளர் வெளிநாட்டு நாணயத்திற்கு விற்பதற்கோ அல்லது பண்டமாற்று செய்வதற்கோ உந்தப்படுவதற்கு பெருமளவில் சாத்தியம் உண்டு.

கேள்வி பதில் தொலைக்காட்சி பேட்டியின் போது யெல்சின்" ரஷ்யா தனது அலுவல்களைத் தானே கவனித்துக் கொள்ளும், ஏனைய குடியரசுகள் தமது சொந்த வழிவகைகளைக் கவனிக்க வேண்டும் "எனத் தெரிவித்தார்" அன்னிய தானிய வழங்குனர்களுடன் ரஷ்யா எவ்வித இடைத்தரகர்களுமின்றி நேரடியாக தொடர்பு வைத்துக் கொள்ளும் மிக அண்மையில் கிடைக்கப்பெற்ற புள்ளி விபரங்களின்படி குளிர் காலத்திற்கு சேமிக்கப்பட்டிருக்கும் தானியம் 5 கோடி 10 இலட்சம் மெற்றிக் தொன்கள் மட்டுமே. இந்த கையிருப்பானது கடந்த 50 வருட காலத்தில் ஆகக் குறைந்த அளவாகும். ரஷ்யாவின் 16 பகுதிகளில் ஏற்கனவே பாண் பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்படுகிறது. பேக்கரிகள் முன்னால் நீண்ட வரிசைகள் காணப்படுகின்றன. மத்திய அரசின் நாலு அங்கத்த பொருளாதார குழு அங்கத்தவர்களில் ஒருவரான கிரிகிரி யவ்லின்ஸ்கி ரஷ்ய நாடாளுமன்றத்தில் பேசும் போது பொருளாதார உற்பத்தி 17.5 % வீழ்ச்சியடைந்துள்ளது. மேலும் 3% வீழ்ச்சியானது "முழுமையான ஸ்தம்பித" நிலைக்கு இட்டுச் செல்லும். சோவியத் அதிகாரிகள் மனித்தியாலக் கணக்கில் மேற்கு நாட்டு விருந்தாளிகளிடம் உதவி கேட்டு மன்றாடுகின்றனர். உதவி வழங்க முன் வருபவர்கள் கொடுக்கும் கடன்களை யார் திருப்பித் தருவது - மத்திய அரசா அல்லது குடியரசுகளா? ஏற்கனவே பெற்ற கடனைப் பயன்படுத்திய குடியரசுகள் திருப்பித்தருமா? என்ற பிரச்சினை நிலவுகிறது. ரஷ்யாவில் குவிந்து கிடக்கும் செல்வங்களை ரஷ்யாவின் கரங்களிலே விட்டு விடுவதா?

"யாருக்காவது தொலைபேசியில் தொடர்பு கொள்ள முற்பட்டால் அவர் யாரோ அன்னிய ஒரு கோஷ்டியுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படும்." "நாமே எமது பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் அதிக நேரத்தை செலவிட வேண்டும் என நினைக்கிறேன்" என மொஸ்கோ மேயர் பொப்போவ் கூறுகிறார். சில வெளிநாட்டவர்கள்" கதைகள் அதிகம் நடவடிக்கைகள்தான் இல்லை" என்கிறார்கள்.

இது இவ்வாறிருக்க மொஸ்கோவின் 'ஜனநாயக இயக்கத்தில் பெரும் வாதப்பிரதிவாதம் இடம் பெறுகிறது. தற்போது மேயருக்கு பிரத்தியேக அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது. மேயர் யாரையும் மதிப்பதில்லை அவ்வப்போது பணிப்புரைகளைவிடுத்துச் செயற்படுகிறார்.

படிப்பகம்

www.padippakam.com



ஜனநாயகம் யாருக்கு?

மாநகர அரசாங்கங்களின் தலைவர்களை நியமிக்கும் அதிகாரம் தனக்குத் தரப்படவேண்டுமென யெல்சின் வேண்டுகோள் விடுக்கிறார். அவர்கள் தெரிவு செய்யப்படுவதை அவர் விரும்பவில்லை. ஒரு சுதந்திரமான தேர்தலில் ரஷ்யாவின் 68 மாகாணங்களில் அரைவாசிக்கு மேற்பட்டவை கம்யூனிஸ்டுக்களை தெரிவு செய்து விடுமென அவர் பயப்படுகிறார். இது யெல்சினுக்கு தலையிடியாய் அமையும். உள்ளூர் மட்டத்தில் கம்யூனிஸ்டுக்கள் இன்னமும் சக்தியுடையவர்களாய் இருக்கிறார்கள்.

மேயர் பொப்போவ் பலமிக்க நிறைவேற்று அதிகாரம் கொடுபட வேண்டுமென விடாப்பிடியாய் இருக்கிறார். இது சர்வாதிகாரப் போக்கு என அவரது எதிர்பாளர்கள் கூறுகின்றனர். சொவிடாநொஸ்ட் பத்திரிகை தலையங்கத்தில் "கம்யூனிஸ்ட் கட்சியின் இடத்தில் தற்போது பலமிக்க நிருவாக அதிகாரம்" எனக் குறிப்பிட்டது." யுத்தங்களின் பின் புரட்சிகளின் பின், பெரிய சமூக அழிவுகளின் பின் நிறைவேற்று அதிகாரம் பலமடைவதாக" சரித்திராசிரியர் இலெக்கு கிவா வாதிடுகிறார்.

"அதிகாரம் பலமுள்ளதாக இருந்தால் சமுதாயம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படலாம். இல்லாவிடின் தோல்வியும்" அவர் என இஸ்வெஸ்டியா பத்திரிகையில் எழுதினார்.

கம்யூனிஸ்டுகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கென கமிட்டிகள் உருவாக்கப்பட்டுள்ளன. மாக்சிஸ்ட்டுக்கள் "இடதுசாரிசக்திகள்" என்ற கட்சியை அமைத்ததாகவும் அறிவித்துள்ளனர். இவ்வாண்டு ஒக்டோபர் புரட்சித் தினத்தை இவர்கள் நினைவு கூர்ந்தனர் என்பதும் தெரியவருகிறது.

வெளிநாட்டு வர்த்தக பிரதிநிதிகள் மத்தியில் முன்னாள் வெளிநாட்டமைச்சர் எட்வேட் செவநாட்சே உரையாற்றுகையில் "ஆபத்து எந்த ஒரு குறிப்பிட்ட அமைப்பிலிருந்து வரவில்லை. அது மோசமடையும் பொருளாதார நிலை – உற்பத்தி வீழ்ச்சி என்பதிலிருந்தே வெளிவருகிறது" என்றார். வாரந்த 'மொஸ்கோ நியூஸ்' நுகர்வு பொருள்களின் தட்டுப்பாட்டால் குளிர் காலத்திலும் வசந்த காலத்திலும் பெரும் கலவரங்கள் வெடிக்கலாம், எனக் கூறியுள்ளது.

சோவியத் யூனியனின் கம்யூனிஸ்ட் கட்சி (அண்மைக் காலங்களில்) பெயரளவிலாவது அதிகாரத்தில் இருந்தபோது அங்கு நிலவிய அதிருப்திகளை மேற்கத்திய செய்தி நிறுவனங்கள் 'ஜனநாயகத்தின் பெயரால் பெரும் விளம்பரம் கொடுத்து வந்தன. சோவியத் நாடு பிளவுபடவேண்டும் சின்னா பின்னப்படவேண்டும் மென்று ஊக்கமளித்து வந்தன.

படிப்பகம்

www.padippakam.com


இன்று கம்யூனிஸ்ட் கட்சி அதிகாரத்தில் இல்லை. எனவே தான் [illegible] சோவியத் நாட்டுக் குடியரசுகள் தனித்தனியாக பிரிந்து செல்வது அவற்றிற்கு நல்லதல்ல. ஏதோ வகையில் ஒரு இணைப்பு இருக்க வேண்டும் என விரும்புகின்றனர். நாடுகள் பிரிந்து சென்றால் அவற்றுள் சிலவற்றில் கம்யூனிஸ்ட்டுக்கள் மீண்டும் அதிகாரத்திற்கு வந்து விடுவார்கள் என்ற பயம் இன்று மேற்குலகத்து ஆள்வோரை ஆட்கொண்டுள்ளது.

சோவியத் யூனியனின் சீரழிவுக்கு காரணம் சோஷலிசப் பாதையல்ல. அதற்கு மாறும் குருஷேவ் காலத்திலிருந்து கோபச்சேவ் காலம் வரை சோஷலிசப் பாதையிலிருந்து விலகியதாலேயே பொருளாதாரம் சீர்குலைந்து இனங்களுக்கிடையில் குரோதம் வளர்ந்தது, மற்ற நாடுகளின் உள் விவகாரங்களில் தலையீடு என்பன இடம் பெற்றன. எத்தனை கோடி டொலர்களையும் யென்களையும் கொட்டினாலும் சோவியத் யூனியனையும் அதன் மக்களையும் நீண்ட காலத்துக்கு பிற்போக்கு சக்திகளால் ஏமாற்ற முடியாது. சோஷலிசம் தோற்கடிக்க முடியாத தொழிலாளி வர்க்கத்தின் விமோசனப் பாதையாகும். சோவியத் தலைமை கடந்த முப்பது வருடங்களுக்கு துரோகம் செய்து பேரழிவை ஏற்படுத்தி விட்டது. இதனை மகத்தான சாதனைகள் படைத்த சோவியத் மக்கள் விரைவில் இனம் காண்பார்கள். இன்றைய பின்னடைந்த சீரழிந்த நிலையை மாற்றி புதிய நிலையைத் தோற்றுவித்தே தீருவார்கள். அப்போது அந்த நாட்டில் சோஷலிசம் மீண்டும் புத்தொளி வீசி நடை போட்டே தீரும்.

படிப்பகம்

www.padippakam.com



## க்ருஷ்ச்சொவ் முதல் கொர்பச்சொவ் வரை

ஒருவகையில் க்ருஷ்ச்சொவ் செய்யத் தொடங்கிய காரியத்தை கொர்பச்சொவ் நிறைவேற்றி வருகிறார் என்று சொல்லலாம். சோவியத் யூனியனில் ஏற்பட்ட தவறுகள் அனைத்திற்கும் ஸ்டாலின் மீது பழி போடும் பணியைக் க்ருஷ்ச்சொவ் தொடக்கி வைத்தார். இன்று மேலை முதலாளித்துவ நாடுகளை மகிழ்ச்சிப்படுத்தும் முயற்சியில் கொர்ப்ச்சொவ் க்ருஷ்ச்சொவை விட நாலு படி மேலே போய் ஸ்டாலினை ஹிட்லருடன் ஒப்பிடும் நிலைக்கு உரமூட்டுகிறார். ஸ்டாலின் பற்றிய விமர்சனம் அவசியமற்றதோ தவறானதோ என்பது மாக்ஸிஸ-லெனினிஸ நிலைப்பாடல்ல. ஸ்டாலினின் தவறுகளும் சாதனைகளும் அவற்றின் வரலாற்றுப் பின்னணியிலும் பாட்டாளிவர்க்கப் புரட்சியின் கண்ணோட்டத்திலுமே மேற்கொள்ளப்பட வேண்டும், என்பதே மாக்ஸிஸ-லெனினிஸத்தின் நோக்கு. ஸ்டாலின் பற்றிய நிபந்தனைகளையும், அவதூறுகளையும் பரப்புவோரது அரசியல் நிலைப்பாடுகளையும் நோக்கங்களையும் நாம் கணிப்பிற் கொள்ள வேண்டுமாயினும் அவற்றை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு சகல விமர்சனங்களையும் நாம் அலட்சியம் செய்து விடலாகாது.

* ஸ்டாலினைக் கண்முடித்தனமாகத் தாக்குவது
முதலாளித்துவத்திற்கு உதவுவதற்கே!

ஸ்டாலின் 30 வருடங்களுக்கு மேலான தலைமையில் பல தவறுகள் நேர்ந்துள்ளன. பெருந்தொகையான குற்றமற்றோர் கடுந்தண்டனைக்குள்ளாகினர். சர்வதேச நிலவரங்களிலும் ஸ்டாலினின் தவறுகள் பாரிய இழப்புகளுக்கு வழி வகுத்துள்ளன. இவர் பற்றி விமர்சிப்போரும் ஹிட்லர்-ஸ்டாலின் உடன்படிக்கையை காரணம் காட்டி ஸ்டாலின் மீது அவதூறுகளையும் பொழிவோரும் ருஷ்யப் புரட்சியின் வெற்றி முதலாக சோவியத் வரலாறு எதிர்கொள்ள அவசியமாய் இருந்த நெருக்கடிகளையும், அவற்றின் அகப் புறக் காரணங்களையும் புறக்கணித்து விடுகின்றனர். ஸ்டாலின் பற்றிய இன்றைய சோவியத் விமர்சனங்கள் ஸ்டாலின் மனித உரிமைகட்கு எதிரி என்ற நோக்கிலின்று, சோவியத் யூனியனின் இன்றைய அவலங்கள் அனைத்தையும் சுமத்த வசதியான ஒரு சுமைதாங்கி என்ற முறையில் வைக்கப்படுகின்றனர். இவை மேலை முதலாளித்துவ, ஏகாதிபத்தியங்களையும், முதலாளித்துவத்துக்கு வக்காலத்து வாங்கும் தாராளவாதிகளை, சீர்திருத்தவாதிகளையும் நிச்சயம் மகிழ்விக்கும். அது மட்டுமன்றி, சோவியத் யூனியனில் முதலாளித்துவ ஊடுருவலை வலுப்படுத்த உதவும் நோக்கில் புதிய சோவியத் தலைமைக்கு உதவியாகவும் இருக்கும். மறுபுறம் பாஸிஸத்திற்கு எதிரான யுத்தத்திலும், காலனித்துவத்தினின்றும், ஏகாதிபத்தியத்தினின்றும் விடுதலை வேண்டிய நாடுகளதும், மக்களதும் போராட்டங்களிலும் சோவியத் யூனியன் வழங்கிய மகத்தான பங்களிப்பை மறுதலிக்கும் முயற்சிகட்கும் இந்த விமர்சனங்கள் துணை போகின்றன. சோவியத்தின் சாதனைகளையெல்லாம் சோவியத் அரசினதும், கட்சியினதும் சாதனைகளாகக் காட்டித் தவறுகளை எல்லாம் ஸ்டாலின் தலை மீது சுமத்தும் முயற்சிகள் மிகவும் கேவலமானவை.

படிப்பகம்

www.padippakam.com



இந்த வகையில் கொர்பச்சொவ் தலைமை குருஷ்ச்சொவை மீறி வெகு தூரம் சென்று விட்டது. பொருளாதாரம், சுற்றாடல், விவசாயம், தேசிய இனப் பிரச்சினை போன்ற விஷயங்களில் உள்ள நெருக்கடிகட்கான பழியை முற்றாக ஸ்டாலின் மீதும் ஸ்டாலினிஸத்தின் மீதும் சுமத்திவிட முடியாது. இப்பிரச்சினைகள் ஸ்டாலினோ அல்லது ப்ரெஷ்னேவோ தனியே உருவாக்கியவை அல்ல. ஸ்டாலின் காலத்தில் பல தவறுகள் இழைக்கப்பட்டன. அவை இன்றைய நெருக்கடிகட்குத் தம் பங்கை வழங்கியுள்ளன. ஆயினும், அதிமுக்கியமான விஷயம் ஏதெனில் ஸ்டாலினின் மறைவின் பின்பு அதிகாரத்திற்கு வந்த புதிய தலைமையின் கீழ் ஏற்பட்ட திசைமாற்றமேயாகும்.

* <u>தவறுகள் மூலமே சரியானவை பெரும்பாலும் தெரிய வருகின்றன</u>

மார்க்ஸிஸத்தை நன்கு கற்றறிந்ததாலோ, மக்களிடை நடைமுறையில் மிகுந்த பரிச்சயம் பெற்றதாலோ, உண்மையான புரட்சிவாதி என்பதாலோ அறிவுத் புத்திக் கூர்மையும் உடையவர் என்பதாலோ எந்த ஒரு மனிதரும் தவறுகட்கு அப்பாற்பட்டவராகி விட முடியாது. தவறுகள் மூலமே சரியானவை பெரும்பாலும் தெரிய வருகின்றன என்பதும் செயலற்றோரே தவறற்றோராக இருக்க முடியும் என்பதும் சிறந்த மார்க்ஸிய-லெனினிஸ வாதியான மாஓ சேதுங் பல தடவைகள் வற்புறுத்திய விஷயங்கள். சோவியத் யூனியன் போன்ற பெரிய நாட்டில் ஸாரிஸ எதேச்சாதிகாரத்தின் கீழ் குறைவிருத்தியடைந்த ஒரு முதலாளித்துவ அமைப்பின் வரலாற்றுப் பின்னணியில், சோஷலிஸ ஆட்சியை நிறுவி நிர்வகிப்பது எளிதல்ல. அது மட்டுமன்றிப் புரட்சியின் வெற்றியை அடுத்து இடையறாது அயற்தலையீடுகளும் பல்வேறு சோவியத் விரோத நடவடிக்கைகளும் நிறைந்த உலகச் சூழலில் சோவியத் யூனியனையும் அதன் பாட்டாளிவர்க்க அரசு அதிகாரத்தையும், பேணிக் காப்பது மிகச் சிக்கலானது. லெனின் தலைமை முகங் கொடுக்க வேண்டியிருந்த பிரச்சினைகளை விடப் பெரிய பிரச்சினைகட்கு ஸ்டாலின் தலைமை முகங் கொடுக்க வேண்டியிருந்தது. சோவியத் புரட்சி எந்த நிலையிலும் ஒரு சீரான முறையில் மேல்நோக்கி முன்னேறவில்லை. சோவியத் அனுபவங்களை ஆதாரமாகக் கொண்டே மாஓ சேதுங் முரண்பாடுகள் பற்றிய தன் அதி உன்னதமான கட்டுரைகளை வழங்கினார். முரண்பாடுகளை சரியாக அடையாளம் காண்பதும் பகை முரண்பாடுகட்கும் நேச முரண்பாடுகட்கும் இடையில் வேறுபாடு காண்பதும் அவற்றைச் சரிவரக் கையாள்வதும் எவ்வாறு என்று பொதுவான வழிகாட்டல்கள் உள்ள போதும், குறிப்பிட்ட சூழ்நிலைகளில் சரியான மார்க்கம் எது என்பதற்குப் புரட்சிகர நடைமுறையை விட உயர்ந்த ஆசான் இல்லை. அறிவு நடைமுறையினின்று விருத்தியடைந்து நடைமுறைக்கு மீளும் போக்கிலேயே விருத்தியடைகிறது, என அறிவோம். இந்த விருத்தியில் சரியான செயல்களும் தவறான செயல்களும் பங்களிக்கின்றன. தவறே இல்லாத நடைமுறை என மானுடர் உலகில் எதுவுமில்லை. சிக்கலான சூழல்களில் தவறுகள் நேர்வது இயல்பானது. அவை திருத்தப்படுவதும் நடைமுறை

படிப்பகம்

www.padippakam.com



முற்போக்கான திசையில் அமைவதும் நடைமுறை எத்தகைய சிந்தனைப் போக்குகளால் வழிகாட்டப்படுகிறது என்பதைப் பொறுத்தது. இந்த அடிப்படையில் ஸ்டாலினை மதிப்பிட்ட மா ஓ சேதுங் அவரது சரியான பங்களிப்புகள் தவறானவைகளைவிட அதிகமானவை என்று கூறினார். இந்த மதிப்பீடு ஸ்டாலின் பற்றிய க்ருஷ்ச்சொவின் விமர்சனங்கட்கு நல்ல பதிலாக அமைந்தது. அதை இன்று மாற்றுவதற்கான புதிய தகவல்களோ ஆதாரங்களோ அதிகமில்லை. ஸ்டாலின் தலைமையின் கீழ் சோவியத் அரசு அயற்பகைவர்கட்கும் நாட்டினுள் எஞ்சியிருந்த பிற்போக்கு சக்திகட்கும் எதிராகப் போராட வேண்டியிருந்தது. சோவியத் யூனியனின் பொருளாதார நெருக்கடியைக் கருத்திற்கொண்டு லெனின் முன் வைத்த புதிய பொருளாதாரக் கொள்கையைத் தவறாக விளங்கிக் கொண்ட சுரண்டும் வர்க்கத்தினர் சோஸலிஸ மார்க்கத்திற்கு முட்டுக்கட்டை போட முனைந்தனர். முதலாளித்துவ வல்லரசுகள் சோவியத் யூனியனைத் தனிமைப்படுத்தவும் பலவீனப் படுத்தவும் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டன. கட்சியின் தலைமையின் கீழ் ஐக்கியமும் சோவியத் அதிகாரத்தைப் பலப்படுத்தலும் தேவையும் முக்கியமாயிருந்த சூழ்நிலையில் அவற்றைப் பிளவுபடுத்தும் காரியங்கள் நடந்தன. எனவே சோவியத் அரசையும் பாட்டாளி வர்க்கத் தலைமையின் அதிகாரத்தையும் ஸ்திரப்படுத்தும் பணியே ஸ்டாலினின் தலைமையின் பிரதான பணியாயிற்று. இதனை முதன்மைப்படுத்தும் போக்கில் பல்வேறு இரண்டாம் பட்ச முரண்பாடுகளும் சிகை முரண்பாடுகளும் தவறாகக் கையாளப்பட்டன. இத்தவறுகளின் விளைவுகள் பல் வேறு துறைகளையும் பாதித்தன. எவ்வாறாயினும் ஸ்டாலின் தலைமையில் சோவியத் யூனியன் வேகமான பொருளாதார தொழில் விருத்தியடைந்ததையும் சர்வதேச பாட்டாளி வர்க்கத்தினதும் ஒடுக்கப்பட்ட நாடுகளதும் மக்களதும் மதிப்பிற்கும் அபிமானத்திற்குமுரிய நாடாக விருத்தியடைந்ததையும் யாரும் மறுக்க இயலாது.

முதலாம் ஏகாதிபத்திய யுத்தம் தீர்க்கத் தவறிய முரண்பாடுகளே ஐரோப்பாவில் பாஸிஸத்தின் எழுச்சி. ஏகாதிபத்திய பிரித்தானியாவையோ அமெரிக்காவையோ கவலைக்குட்படுத்தவில்லை. அவர்களது எதிர்பார்ப்பெல்லாம் ஹிட்லரின் தலைமையிலான பாஸிஸ ஜேர்மனியும் சோவியத் யூனியனும் மோதி அழிவுபட்ட பின் முழு உலகையும் தங்கள் ஆதிக்கத்திற்குள் மீட்கலாம் என்பதே. ஜேர்மன் பாஸிஸம் ஒவ்வொரு ஐரோப்பிய நாடாகத் தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வர முற்பட்ட போது பிரித்தானிய அரசு முதலில் அசட்டையாகவே இருந்தது. அமெரிக்காவோ ஜப்பான் 'பேள்ஹாபர்' துறைமுகத்தைத் தாக்கும் வரை யுத்தம் பற்றிய அக்கறையின்றி அதன்மூலம் தன் செல்வத்தைப் பெருக்குவதிலேயே கண்ணாயிருந்தது. ஹிட்லர்-ஸ்டாலின் உடன்படிக்கை மூலம் ஸ்டாலின் தலைமையிலான சோவியத் யூனியன், தன் மீது உடனடியான ஜேர்மன் தாக்குதல் ஏற்படாது தவிர்த்ததோடு நிரந்தரமாகத் தவிர்க்க முடியாத யுத்தத்திற்கு தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டது. இந்த வரலாறு உண்மையைத் திரிபு படுத்த மேலை முதலாளித்துவ நாடுகள் கடுமையாக முயன்ற போதும் இரண் டாம் உலக யுத்தத்தின் போது சோவியத் யூனியனின் மகத்தான பங்களிப்பை

படிப்பகம்

www.padippakam.com



அவர்களால் மறைக்க முடியவில்லை, அண்மைக் காலங்களில் பாஸிஸத்தை முறியடிப்பதில் சோவியத் பங்களிப்பைக் குறைத்துக் காட்டும் முயற்சிகள் வலுவடைந்துள்ளன. இதற்கு உடந்தையாக இன்றைய சோவியத் தலைமையும் உறிட்லர்-ஸ்டாலின் உடன்படிக்கைபற்றிய மேலை நாடுகளின் மதிப்பீட்டிற்கு உடன்பாடாகத் தன் நிலைப்பாட்டை மாற்றி வருகின்றது. கொர்பச்சொவ் தலைமை மேலை முதலாளித்துவத்தை திருப்திப்படுத்துவதற்கு சோவியத் வரலாற்றையே அடமானம் வைக்கக் கூசவில்லை என்பதே உண்மை.

ஸ்டாலினின் தலைமையின் கீழ் ஒரு புதிய அதிகார வர்க்கம் உருவானது உண்மை. அது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைப் பாட்டாளி வர்க்கத்தின் பேரில் ஒரு சிறு கும்பல் நடத்தும் சர்வாதிகாரமாக மாற்ற முற்பட்டதும் உண்மை. இத்தவறு நேர்வதற்கு உலக நிலவரமும் சோவியத் உள் நிலவரமும் உடந்தையாக இருந்த போதும் ஸ்டாலின் தலைமையின் தவறுகளும் முக்கியமானவை. வர்க்கப் போராட்டத்தின் முக்கியத்துவத்தை ஸ்டாலின் அலட்சியம் செய்த சூழ்நிலைகள் பற்றியும் அவரது அகநிலை சார்ந்த சில முடிவுகளது பாரிய விளைவுகள் பற்றியும் 1960 களில் மாக்சிய லெனினிய சக்திகள் தெளிவாகவே விமர்சித்துள்ளனர். ஆயினும் ஸ்டாலின் தன் இறுதி நாட்களில் தன் தவறுகளை அடையாளம் கண்டதோடு சோவியத் யூனியனில் உருவாகிவரும் தவறான போக்குகள் பற்றியும் எச்சரித்திருந்தார். ஸ்டாலினின் மரணம் சோவியத் யூனியனில் உருவாகி வளர்ந்து வந்த புதிய அதிகார வர்க்கம் தன் செல்வாக்கைப் பிரயோகிக்க எதிர்பார்த்திருந்த சூழ்நிலையை உருவாக்கியது. குருஷ்சொவ் தலைமை ஒரு புறம் ஸ்டாலின் தலைமையில் கட்டியெழுப்பப்பட்ட சோஸலிஸ பொருளாதார அடிப்படையைச் சீர்குலைப்பதில் மும்முரமாகச் செயற்பட்டது. மறுபுறம், சர்வதேச ரீதியாக ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்திற்கும், ஆயுதமேந்திய புரட்சிக்கும் ஆப்பு வைக்கும் முகமாக "சமாதான முறையில் சோஸலிஸ மாற்றம்", 'சமாதான சக ஜீவனம்' என்ற கோட்பாடுகளை முன் வைத்தது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தை திருப்தி செய்வதற்கு மாக்ஸிஸ-லெனினிஸக் கோட்பாட்டை நிலைநிறுத்திய சீனக் கம்யூனிஸ்ட் தலைமைக்குப் பாடம் புகட்டும் விதமாக சீனாவைத் தனிமைப்படுத்தி பலவீனப்படுத்தும் முயற்சிகளில் சோவியத் தலைமை இறங்கியது, அதே சமயம் அமெரிக்காவுக்கு ஈடான ஒரு பெரு வல்லரசாக உலக ஆதிக்கத்திற்காகப் போட்டியிடவும் முனைந்தது. அம்முயற்சியில் தன் பகடைகளாக சோஸலிஸ நாடுகளைப் பயன்படுத்தியது. அத்துடன் கொலனித்துவத்தினின்று விடுதலை பெற்ற நாடுகள் மத்தியில் சோவியத் யூனியன் பற்றி இருந்த நல்லெண்ணத்தையும் உலகக் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் தன் முக்கியத்துவத்தையும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த அது தயங்கவில்லை. இதன் விளைவாக சோஸலிஸ அரசுகள் முதலாக உலகக் கம்யூனிஸ்ட் இயக்கம் வரையில் ஒரு பெரும் பிளவு ஏற்பட்டதை நாம் அறிவோம். இதன் விளைவுகள் பற்றி வேறோர் சந்தர்ப்பத்தில் கவனிப்போம்.

படிப்பகம்

www.padippakam.com


* சோவியத் மேலாதிக்கமும்

சோஸலிஸ் முகாமும்

கியூபாவுக்கு சோவியத் யூனியன் ஏவுகணைகளை அனுப்பியதைத் தொடர்ந்து ஏற்பட்ட நெருக்கடி ஒரு முக்கியமான சம்பவம் எனலாம். கியூபாவுக்கு சோவியத் யூனியன் ஏவுகணைகளை அனுப்பியது தவறானது. ஏனெனில் அவற்றால் கியூபாவின் பாதுகாப்பிற்கு அதிக உத்தரவாதமில்லை. அது கியூபாவை அமெரிக்க அயலில் ஒரு சோவியத் தளமாகப் பயன்படுத்தும் நோக்கை விட வேறு நோக்குடையதல்ல. ஏவுகணைகளை அனுப்பிய பின் அமெரிக்கா கியூபாவை மிரட்ட முற்பட்டது. தொடக்கத்தில் வீறாப்புடன் பேசிய குருஷ்சேவ் அரசாங்கம் பின்னர் பணிந்து பின்வாங்கியது. இதன் விளைவாக சோவியத் யூனியன் மட்டுமன்றி கியூபாவும் ஏகாதிபத்திய மிரட்டலுக்கு தலை வணங்குமாறான நிலையே உருவாயிற்று. உலகமெங்கும் ஏகாதிபத்திய விரோதப் போராட்டங்களை நிபந்தனையின்றி ஆதரிக்கும் நிலைப்பாடு மெல்ல மெல்ல மாறி சோவியத் யூனியனின் லாபத்திற்கு ஏற்றவாறு நிலைப்பாட்டை எடுக்கும் போக்கு குருஷ்சேவ் கீழேயே விருத்தி பெற்றது. சீன-இந்திய எல்லைப் போரில் இந்தியாவைத் திருப்திப்படுத்தும் நோக்கில் சோவியத் யூனியன் இந்தியாவுக்குச் சாதகமான ஒரு "நடுநிலை" நிலைப்பாட்டை மேற்கொண்டது. அல்பானியக் கம்யூனிஸ்ட் கட்சியுடனான வேறுபாட்டை காரணமாகக் கொண்டு யூகோஸ்லாவிய அரசைத் திருப்திப்படுத்தும் முகமாக அல்பானியாவை தனிமைப்படுத்தும் முயற்சிகளை மேற்கொண்டது. எந்த வகையிலும் சோஸலிஸ முகாமைப்படுத்தும் காரியங்களல்ல. சோவியத் மேலாதிக்கத்தை வலியுறுத்துமளவுக்கு குருஷ்சேவ் தலைமைக்கு ஒரு "சோஸலிஸ முகாம்" அவசியமாயிற்று. குருஷ்சேவ் எவ்வளவுதான் மேலை ஏகாதிபத்தியத்துடன் சமாதான சகஜீவனம் பற்றிப் பேசிய போதும் உலக ஆதிக்கத்திற்கான போட்டி உக்கிரமடைந்தே வந்தது. இப்போட்டி ஒருபுறம் முதலாளித்துவத்திற்கும் ஏகாதிபத்தியத்திற்கும் மறுபுறம் அவற்றுக்கு எதிரான ஒரு மாற்றுச் சமுதாய அமைப்பை முன் வைக்கும் ஒரு சோஸலிஸ முகாமுக்கும் இடையிலான போட்டியாக இல்லாமல் வல்லரசு மேலாதிக்கத்திற்கான ஒரு போட்டியாக இருந்ததை மாக்ஸிஸ-லெனினிஸ வாதிகள் அடையாளங்கண்டு கொண்டனர். இதன் விளைவாகவே கம்யூனிஸ்ட் கட்சிகளிடையிலும் சோஸலிஸ நாடுகளிடையிலும் உள்ள உறவு சமத்துவத்தின் அடிப்படையில் அமைய வேண்டுமே அல்லாமல் மூத்தகட்சி-இளைய கட்சி, பெரிய நாடு-சிறிய நாடு என்ற அடிப்படையிலான வேறுபாடுகள் அனுமதிக்கப்படக் கூடாது என்று அவர்கள் வலியுறுத்தினர். இதனைச் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியும் அரசும் ஏற்க மறுத்தன. முன்பு சோவியத் யூனியன் மீதும் சோவியத் அரசு மீதும் இருந்த பெருமதிப்பின் விளைவாக இருந்த ஒரு செல்வாக்கை ஒரு நிரந்தர அதிகார உரிமையாக அவர்கள் கருதியமை உலகின் ஏகாதிபத்திய விரோத சோஸலிஸ இயக்கங்களை சோவியத் யூனியனையும் கட்சித் தலைமையினையும் நலன்கட்கும் கீழ்ப்பட்டவையாகவே கொள்ளத் தூண்டியது. ஐரோப்பியப் பொதுச் சந்தை பற்றிய எண்ணம் ஏற்படுமுன்னமே சோஸலிஸ நாடுகளிடையில் பொருளாதார ஒத்துழைப்பை சாத்தியமாக்குமாறு ஸ்டாலின்

படிப்பகம்

www.padippakam.com

தலைமையின் கீழ் உருவான கொமிகொன் எனும் பொருளாதார அமைப்பும், சோவியத் யூனியனையும் சோஷலிஸ நாடுகளையும் தனிமைப்படுத்தும் முகமாக மேற்கு நாடுகள் பிரகடனம் செய்த 'இரும்புத் திரை'க்கும் மேற்கு நாடுகள் ஏற்படுத்திய நேட்டோ போன்ற இராணுவ முகாம்களுக்கும் உரிய பதிலாக உருவான வார்சௌ உடன்படிக்கையும் ஸ்டாலினுக்குப் பின்னர் சோவியத் யூனியனின் பொருளாதார ராணுவத் தேவைகட்குக் கிழக்கு ஐரோப்பிய நாடுகளைக் கீழ்ப் படுத்தப் பயன்பட்டன. இதன் விளைவாகக் கிழக்கு ஐரோப்பாவில் சோவியத் ஆதிக்கத்தின் மீது அதிருப்தி வளர ஆரம்பித்தது.

ஹங்கேரியில் சோஷலிஸ முகாமைப் பலவீனப்படுத்தும் நோக்குடன் தொடங்கிய நடவடிக்கைகளை உரிய காலத்தில் முறியடிக்கத் தவறியதால் 1956 ல் கிளர்ச்சி வெடித்து, உயிரிழப்புகள் நிகழ்ந்தன. மறுபுறம் போலந்தில் மக்களது நியாயமான கோரிக்கைகட்கு விரோதமான கடும் நடவடிக்கையில் சோவியத் யூனியன் இறங்கியதால் 1957 ல் ஏற்பட்ட நெருக்கடி சீனப் பிரதமர் சௌ என் லாயின் தலையீட்டின் மூலம் சுமுகமாகத் தீர்க்கப்பட்டது. ஆயினும் சோவியத் அரசின் போக்கும் அயலுறவுகளும் மேலும் அதிருப்திக்கே வழிகோலின.

1965 ல் க்ருஷ்செவ் பதவி நீக்கப்பட்டதற்கு அவரது பொருளாதாரக் கொள்கையின் - முக்கியமாக விவசாயக் கொள்கையின் தோல்வி ஒரு முக்கிய காரணம் எனப்படுகிறது. சோஷலிஸ பொருளாதார அமைப்பைப் பலவீனப் படுத்திய க்ருஷ்செவ் அரசின் கொள்கைகளோ மார்க்ஸிஸ-லெனினிஸ சர்வ தேசக் கொள்கைக்கு மாறான அதன் போக்கோ அத்துடன் முடிவுக்கு வந்துவிட வில்லை. ப்ரெஷ்னெவ் தலைமையில் சோவியத் யூனியன் புதிய அதிகார வர்க்கம் இன்னும் உக்கிரமாகவே சோவியத் யூனியனை ஒரு உலக மேலாதிக்க வல்லரசாக மாற்றும் முயற்சியில் இறங்கியது. இதன் விளைவுகளை சோவியத் சமுதாயம் இன்னும் அனுபவிக்கிறது.

* மூன்றாம் உலக நாடுகளில் சோவியத் ஆதிக்கத் திணிப்பு

சோவியத் யூனியன் தன் இராணுவ பொருளாதார அதிகாரத்தை மூன்றாம் உலகின் மீது துஷ்பிரயோகம் செய்வதை ப்ரெஷ்னெவ் தலைமையின் கீழ் மிகத் தெளிவாகவே காண முடிந்தது. ஒரு புறம் உலக சமாதானம், உலகின் ஏகாதிபத்திய விரோத விடுதலை இயக்கங்கட்கு ஆதரவு, அணிசேரா நாடுகளுடன் நல்லுறவு போன்ற கோஷங்கள் தொடர்ந்தன. மறுபுறம் அவற்றையே போர்வையாக்கி சோவியத் மேலாதிக்கத்தை விரிவுபடுத்தும் நடவடிக்கைகள் விருத்தியடைந்தன, இதன் தொடர்ச்சியாகவே 1963 ல் குறுக்கீடு நிகழ்ந்தது. தேசிய விடுதலைப் போராட்டங்களையும் சோவியத் விஸ்தரிப்பு நோக்கங்கட்குச் சாதகமாகப் பயன்படுத்தும் நோக்கத்தின் விளைவாக அங்கோலாவின் அன்றைய போர்த்துக்கல் அரசின் அனுசரணையுடனும் சோவியத் ஆதரவுடனும் 1974 ல் ஒரு விடுதலை இயக்கம் மற்ற இரண்டை நிராகரித்து

படிப்பகம்

www.padippakam.com


அதிகாரத்தைக் கைப்பற்றிச் சோவியத் சார்பு அரசாங்கமொன்றை நிறுவியது. இதன் விளைவாக மற்ற இயக்கங்கள் பிற்போக்கு சக்திகளுடனும் தென் ஆபிரிக்க நிறவெறி அரசுடனும் அமெரிக்க ஏகாதிபத்தியத்துடனும் கூட்டுச் சேரவும் அங்கோலா உள்நாட்டுக் கலவரத்திற்குட்பட்டுச் சீரழியவும் நேர்ந்தது. எரித்திரிய விடுதலையை ஆதரித்த சோவியத் அரசாங்கம் எதியோப்பிய ராணுவ புரட்சியை அடுத்து எதியோப்பியாவின் புதிய ஆட்சியை ஆதரித்தது. இதையடுத்து தானே பயிற்றுவித்த எத்திரிய விடுதலைப் போராளிகள் மீது தாக்குதல் தொடுத்தது. எதியோப்பியாவிலும் அங்கோலாவிலும் தன் துருப்புக்களை இறக்கினால் ஏற்படும் உயிரிழப்புகள் சோவியத் யூனியனுள் அதிருப்தியை ஏற்படுத்துமென்று கருதி கியூபாவின் (முக்கியமாக அங்கோலாவில்) படைகளைப் பயன்படுத்தியதும் குறிப்பிடத்தக்கது. சோவியத் மேலாதிக்கத் தேவைகளையொட்டியே இந்திய விஸ்தரிப்பு வாதமும், வியட்னாமிய இந்தோசீனப் பிராந்திய மேலாதிக்க நோக்கமும் ஊக்குவிக்கப்பட்டன. சோவியத் ஆதரவின் உத்தரவாதமின்றி இந்தியாவின் விஸ்தரிப்பு நடவடிக்கைகள் (வங்காளதேச-விடுதலைப் போரின் போதும், "சிக்கிம்" இணைப்பிலும் காஷ்மீரை இந்திய யூனியனுள் நிரந்தரமாக்கியதும்) எளிதிற் சாத்தியமாகி இரா. வியட்னாமில் சோவியத் சார்பு சக்திகள் அரச அதிகாரத்தைக் கைப்பற்றியதும் வியட்னாம் கம்போஜத்தின் மீது போர் தொடுத்ததும் லாவோசை தன் அரசியல் ஆதிக்கத்தினுள் கொண்டு வந்ததும், சோவியத் போர்க் கப்பல்கட்கு வியட்னாமில் துறைமுக வசதிகள் வழங்கப் பட்டதும் தற்செயலான தொடர்பற்ற விஷயங்களல்ல. சீன-வியட்னாம் மோதலுக்குக் காரணமான பின்னணியில், சோவியத் தூண்டுதல் ஒரு முக்கிய காரணி என்று கருத இடமுண்டு. ப்ரெஷ்னெவ் ஆட்சியின் கீழேயே 1968 ல் சீன-சோவியத் எல்லையில் இரத்தம் சிந்தும் நிலை உருவானது.

சோவியத் யூனியனின் மேலாதிக்கப் போக்குப் பற்றியும் சோவியத் அமெரிக்க மேலாதிக்கப் போட்டி, ஆயுதப் போட்டி போன்ற விஷயங்கள் பற்றியும் சீன அரசினதும் கம்யூனிஸ்ட் கட்சியினதும் எச்சரிக்கைகளை பலர் சீனாவின் தேசிய நலனின் விளைவான மிகைப்படுத்தப்பட்ட வாதங்கள் என்றே காட்ட முனைந்தனர். சோவியத் யூனியன் ஆப்கானிஸ்தானில் தலையிட்ட போது அதை முற்போக்கான காரியம் என்று பாராட்டியவர்களும் உள்ளனர். இந்தியா அது பற்றிச் சாதித்த மௌனமும் வழங்கிய மறைமுக ஆதரவும் பற்றிய விளக்கங்கள் கூடச் சீனாவினதும் பாகிஸ்தானினதும் 'உள்நோக்கங்களின்' சார்பாக நியாயப்படுத்தப்பட்டன. ஆயினும் வரலாறு உண்மையை நிரூபித்து விட்டது. ஆப்கானிஸ்தான் யுத்தம் சோவியத் யூனியனின் 'வியட்னாம் யுத்தமாக' மாறி சோவியத் இராணுவ பலமும் ஒரு காகிதப் புலி என்பதை நிரூபித்தது.

1968 ல் செக்கோஸ்லவாக்கியாவில் சோவியத் இராணுவ ஆக்கிரமிப்பும் 1981 ல் போலந்தில் சோவியத் மிரட்டலும் தலையீடும் கிழக்கு ஐரோப்பிய நிலவரத்தை தற்காலிகமாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனவேயொழிய சோவியத் மேலாதிக்கம் பற்றிய அதிருப்தியை மேலும் உக்கிரமாக்கவே உதவின.

படிப்பகம்

www.padippakam.com



கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் சோஷலிசம் சுயாதீனமான சோவியத் யூனியனுடன் சமத்துவமான அந்தஸ்துடைய தேசங்கள் என்ற அடிப்படையில் விருத்தியடைய அனுமதிக்கப்படவில்லை. இதன் விளைவாக அங்குள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைமைகள் மேலும் பலவீனமடைந்ததுடன் அங்குள்ள ஆட்சிகள் சில மக்களிடமிருந்து தனிமைப்படுத்தப்பட்ட அடக்கு முறை ஆட்சிகளாக விகாரமடைய நேர்ந்தது. சோவியத் ஆதிக்கத்திற்கு உட்பட்ட கிழக்கு ஐரோப்பாவும் சோவியத் செல்வாக்குக்குட்பட்ட பிரதேசங்களும் வெளியில் சோவியத் வலிமையைப் பறை சாற்றிய போதும் உள்ளே சோவியத் அரசின் அதிகாரம் உக்கி உளுத்துக் கொண்டிருந்தது.

* <u>தலைமை ஆள் மாற்றப்பட்டார்</u>

<u>தவறான அடிப்படைகள் மாறவில்லை</u>

க்ருஷ்ச்சொவ் தலைமையின் கீழ் சீர்குலையத் தொடங்கிய சோவியத் பொருளாதாரம் சோவியத் ராணுவ விஸ்தரிப்பாலும், அமெரிக்காவுடனான ஆயுதப் போட்டியாலும், உலக மேலாதிக்கத்திற்கான போட்டியின் விளைவாகவும் மேலும் துரிதமாக சீர்குலையலாயிற்று. எனவே ப்ரெஷ்னெவ் தலைமையின் வீழ்ச்சி தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது. ப்ரெஷ்னெவ் தலைமையின் கீழ் ஊழலும் அதிகார துஷ்பிரயோகமும் அரசிலும் கட்சியிலும் உயர்மட்டங்களில் பரவலாகிவிட்ட காரணத்தாலும் அந்த அதிகார வர்க்கத்தின் செல்வாக்கை நிலை நிறுத்தும் கருவியாகச் செயற்பட்ட அரச இயந்திரத்தின் வலிமையான செயற்பாட்டின் விளைவாகவும் ப்ரெஷ்னெவைத் தூக்கி எறிவது எளிதானதாக இருக்கவில்லை. எனவே ப்ரெஷ்னெவ் ஆட்சி முறையின் வீழ்ச்சி ப்ரெஷ்னெவின் மரணத்திற்கு பின்னரே படிப்படியாக மேற்கொள்ளப்பட்டது.

ப்ரெஷ்னெவின் இடத்தில் கொர்பச்சொவ் வருகை பலவகைகளில் வரவேற்கத் தக்க ஒன்றாகவே தோன்றியது. சோவியத் யூனியனின் பொருளாதார நிலையையும் அதன் சோஷலிஸ ஜனநாயக முறையின் சீரழிவையும் கொர்பச்சொவ் சரியாகவே அடையாளங் கண்டார். ஆயினும் அவர் முன் வைத்த தீர்வுகள் எவ்வகையானவை? சோவியத் பொருளாதார நெருக்கடி, அயலுறவுகள் அமெரிக்காவுடனான ராணுவப் போட்டி, கிழக்கு ஐரோப்பா, சோவியத் சிறுபான்மை தேசிய இனப் பிரச்சினைகள், உலகின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்கள் போன்ற விஷயங்களில் கொர்பச்சொவ் தலைமையின் நிலைப்பாடு பற்றியும் "பெரஸ்த்ரொய்க்கா" (பொருளாதார புனர் நிர்மாணம்) "க்ளாஸ்னொஸ்த்" (ஒளிவு மறைவின்மை) என்பன இன்று எங்கு செல்கின்றன எனவும் மேற்கொண்டு கவனிப்போம்.

"பெரஸ்த்ரொய்க்கா"வை அவசியமாக்கியது சோவியத் பொருளாதாரத்தின் தோல்வி எனில் "க்ளாஸ்னொஸ்த்" சோவியத் சமுதாயத்தில் போதிய மக்கள் ஜனநாயக வளர்ச்சி இல்லாமையாலேயே உண்டானது. சோவியத் யூனியனில் கம்யூனிஸ்ட் கட்சியிலும் அரசிலும் பூரண ஆதிக்கம் செலுத்திய அதிகார வர்க்கம்

படிப்பகம்

www.padippakam.com



எப்போதோ சோஸலிச பொருளாதாரக் கொள்கையை கைவிட்டு விட்டது. தொழிலாளர் அதிகாரமற்ற தொழில் நிர்வாகமும் வசதி படைத்த அதிகார வர்க்கத்தின் ஆதிக்கமும் இலாப நோக்கும் கொண்ட சோவியத் பொருளாதார முறையில் வேகமாக வளர்ந்து வந்த இராணுவ உற்பத்திக்கு இருந்த முக்கியத்துவம் சோவியத் மக்களது அத்தியாவசிய தேவைகளைப் புறக்கணித்தது. மக்களிடமிருந்து தனிமைப்படுத்தப்பட்ட சோவியத் அரசும் கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகார பீடமும் தங்களது வசதிகளையும் சலுகைகளையும் பெருக்குவதிலேயே கண்ணாயிருந்தன. ப்ரெஷ்னெவ் ஆட்சியின் கீழ் அதிகார துஷ்பிரயோகமும் ஊழலும் செருக்கும் பற்றி மார்க்சிச-லெனினிச வாதிகள் பன்முறை எடுத்துக் காட்டியுள்ளனர். இவை கொர்பச்சொவ் அதிகாரத்திற்கு வந்த பின்பு அவரது அரசியல் அதிகாரத்தை உச்சப்படுத்தும் போக்கில் சோவியத் யூனியனில் அம்பலப் படுத்தப்பட்டன. சோவியத் நாட்டில் ஊழல், பொய்மை, பொருளாதார வீழ்ச்சி, சமுதாய சீரழிவு பற்றிய நடவடிக்கைகள் எப்போதோ அவசியமாகவே இருந்தன. ஆயினும் மக்களது நம்பிக்கையை இழந்த அரசும் அரசியற் தலைமையும் அதைச் செயற்படுத்தும் தகுதியையும் திறமையையும் எப்போதோ இழந்து விட்டன. மாற்றம் வந்தாலும் அழிவு வராவிட்டாலும் அழிவு என்று நிலையில் திண்டாடிக் கொண்டிருந்த கட்சிக்குள் மிகுந்த தயக்கத்துடனும் சீர்திருத்தத்திற்கான தேவைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. அவற்றின் பிரதிநிதியாக கொர்பச்சொவ் அதிகாரத்திற்கு வந்தார்.

* கொர்பச்சொவ் எவராகவும் இருக்கலாம்

அவரது நிலைப்பாடு எத்தகையது என்பதே முக்கியம்

கொர்பச்சொவ் ஒரு நல்ல இராஜதந்திரி, திறமையான அரசியல்வாதி, தன் கொள்கையில் உறுதியுடையவர் என்ற வர்ணனைகள் பற்றி விவாதிக்கும் அவசியம் நமக்கில்லை. திறமை இல்லாமல் அவர் சோவியத் யூனியனில் அதிகாரத்திற்கு வந்திருக்க முடியாது. அவரது தலைமையின் `மார்க்சிச நிலைப்பாடு எத்தகையது? வர்க்க சார்பு என்ன? மூன்றாம் உலகு பற்றிய பார்வை என்ன என்ற கேள்விகளே நமக்கு முக்கியமானவை. சோவியத் யூனியனின் அத்தலைமை எதிர்பாராதவாறு இன்று எழும் பிரச்சினைகட்கு சோவியத் அரசும் கொர்ப்பச்சொவ் தலைமையும் எவ்வாறு முகங் கொடுக்கின்றன என்பதையும் கிழக்கு ஐரோப்பிய நெருக்கடிகட்கு சோவியத் யூனியன் எவ்வாறு முகங் கொடுக்கிறது என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். சர்வதேச ராணுவ பொருளாதார அரசியல் அதிகார மேன்மைக்கான வல்லரசுப் போட்டியில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் வல்லரசுகட்கிடையிலான உறவை எவ்வாறு பாதித்து உள்ளன என்பதையும் நாம் கணிப்பிலெடுக்க வேண்டும். அப்போது கொர்-பச்சொவ் பற்றி மேலை முதலாளித்துவ நாடுகளின் பல்வேறு முதலாளித்துவ சார்பு, சீர்திருத்தவாத சக்திகளும் கட்டியெழுப்ப முனையும் படிமம் எவ்வளவு போலியானது என விளங்கும்.

படிப்பகம்

www.padippakam.com


சோவியத் யூனியன் தன் ராணுவ விஸ்தரிப்பையும் ஆக்கிரமிப்புக் கொள்கையையும் கைவிட வேண்டிய நிர்ப்பந்தம் அவை ஏற்படுத்திய பொருளாதார நெருக்கடியின் விளைவானதே. இது போன்றே அமெரிக்காவின் ராணுவ மேலாதிக்கமும் அதன் பொருளாதாரத்தைப் பலவீனப்படுத்தின. ஜப்பானினதும் மேற்கு ஜேர்மனியினதும் எழுச்சி அமெரிக்காவின் முதன்மையை ஆட்டங்காணச் செய்து விட்டது. எனவே ஆயுதக் குறைப்பு இரு பெரு வல்லரசுகட்குமே அவசியமாகி விட்டது. அவர்களது ஆயுத பலம் பரீட்சைக் களங்களின் முக்கியத்துவமும் உலக நிலவரங்களில் ஏற்பட்ட மாற்றங்களால் ஓரளவு குறைந்து விட்டன. எனவே கொர்பச்சொவ் அரசுக்கு உலகின் புதிய சமாதான தேவதையாக காட்சி தருவது சிரமமாக இருக்க வில்லை. ஆயினும் தன் பலவீனத்தின் அடிப்படையில் ஆயுதக் குறைப்பை மேற் கொள்வதாகக் காட்டிக் கொள்வது சோவியத் யூனியனின் செல்வாக்குக்கு நல்லதல்ல. எனவே பேரங்கள் நீடித்தன. ஆயினும் ஆப்கானிஸ்தானில் ஏற் பட்ட தோல்வியும் போலந்தின் அரசியல் நெருக்கடியும் கிழக்கு ஐரோப்பா விலும் சோவியத் யூனியனின் உள்ளேயும் சோவியத் ஆட்சியின் அதிகாரத்திற்கு ஆப்பு. இவை பற்றி பின்னர் வருங் கட்டுரைகளில் விரிவாகக் கவனிப்போம். ஆயினும் கிழக்கு ஐரோப்பிய நெருக்கடிகட்கு முகங்கொடுப்பதிலும் சர்வதேசப் பிரச்சினைகளைச் சமாளிப்பதிலும் கொர்பச்சொவ் தலைமை மேற்கொண்ட மார்க்கம் சோஷலிசத்தை நிலைநிறுத்தி மக்கள் ஜனநாயகத்தை நிறுவுவதற்கு மாறாகச் சிக்கலான பிரச்சினைகளைக் கைகழுவி சோவியத் யூனியனின் தன் அதிகாரத்தை நிறுவுவதே. இதன் போக்கில் மேற்கொள்ளப்பட்ட நடிவடிக் கைகள் கொர்பச்சொவ் தலைமை எதிர்பாராத புதிய உள் நெருக்கடிகளை உருவாக்கியுள்ளன.

* ஆப்கானிஸ்தானில் சோவியத் நடத்திய ஆக்கிரமிப்பே
சோவியத்தின் பன்முக வீழ்ச்சிக்கு வழிவகுத்தன

ஆப்கானிஸ்தானில் சோவியத் யூனியனின் இயலாமையின் விளைவாக பின்வாங்கல் சோவியத் ராணுவ வலிமை பற்றி எதிரிகளது அச்சத்தைத் தணித்ததோடு சோவியத் யூனியனின் நேச சக்திகள் மத்தியில் நம்பிக்கையீனத்துக்கும் தளர்ச் சிக்கும் வழிகோலின. உதாரணமாக 1981ல் அடக்குமுறையில் உறுதியாக நின்ற போலந்து அரசு 1988 முடிவில் சரணாகதி அடையாத குறைக்கு விழுந்து விட்டது. சோவியத் ராணுவ வலிமையைச் சார்ந்து சோவியத் யூனியனின் நலன்கட்கு அமைய நடந்து வந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் சோவியத் யூனியனுக்கு எதிரான தேசிய உணர்வுகள் மேலும் எழுச்சி பெற்றன. சோவியத் ஆதரவுடன் நிலை நிறுத்தப்பட்ட அரசுகட்கு எதிரான தேசியவாத, ஜனநாயக உரிமைகள் தொடர்பான கோரிக்கைகள் எழுந்த போது ப்ரெஷ்நெவ் தலைமையின் பரிச்சயப்பட்ட ஆட்சிகட்கு சோவியத் யூனியனின் புதிய தலைமையால் வழிகாட்டவோ கைகொடுக்கவோ இயலவில்லை. 'க்ளாஸ்னொய்ற்'றும் 'பெரஸ்த்றொய்க்கா'வும் சோவியத்

படிப்பகம்

அதிகாரத்தையும் அதன் கெடுபிடிகளின் ஆட்சிகளையும் தூக்கி எறிய முனைந்தோரின் கையில் புதிய ஆயுதங்கள் ஆகின. இதன் விளைவுகளை 1989 முடிவில் அதிக வேகத்தில் நிகழ்ந்த ஆட்சி மாற்றங்களில் கண்டோம். இவற்றையிட்டு சோவியத் யூனியனால் அதிகம் செய்ய முடியாது போனதுடன் நில்லாது சோவியத் யூனியனுக்குள்ளும் நிலைமைகட்கு அடங்கவில்லை. சோவியத் யூனியனின் உள்ளே நெருக்கடிகள் தீவிரமாயின. சிறுபான்மைத் தேசிய இனங்களின் மத்தியில் இருந்த முரண்பாடுகளைக் கையாள்வதில் கொர்பச்சொவ் தலைமையின் அரச மந்தமான போக்கு அம்முரண்பாடுகளின் வளர்ச்சிக்கு வித்திட்டதோடு புதிய முரண்பாடுகளையும் தோற்றுவித்தது.

* சோவியத் கூட்டரசமைப்பில் பாரிய வெடிப்புகள் :

ஆர்மேனியாவிற்கும் அஸர்பைஜானுக்குமிடையில் உள்ள முரண்பாடு நீண்ட வரலாறு உடையது. அது சோவியத் கூட்டரசமைப்பில் மோதலாக வெடித்தெழாதவாறு பேணப்பட்டாலும் சில பகைமைகள் மத, கலாச்சார வேறுபாடுகளைக் காரணங்கொண்டு நீடித்தன. சோவியத் பொருளாதாரத்தின் சீரழிவும் அஸர்பைஜானியரின் வாழ்க்கைத்தரம் தொடர்ந்தும் குறைந்தே இருந்து வந்தமையும் அவர்களின் மனக்கொதிப்பிற்குத் தேசிய உணர்வின் வடிவிலேயே வடிகால் தேடின. ஆர்மேனிய-அஸர்பைஜானிய எல்லை பற்றிய தகராறுகள் (முக்கியமாக அஸர்பைஜான் பிரதேசத்திற்குட்பட்ட நொகார்னோ-கரபாக் பிரதேசம்) சரிவரத் தீர்க்கப்பட முடியாமை ஆர்மேனிய தேசிய உணர்வுகட்கு ஊக்கமளித்தது. ஸாரிஸத்தின் மிச்சசொச்சமான இப்பிரச்சினை சோவியத் யூனியன் அரசியல் பொருளாதார நெருக்கடியின் விளைவாக வெடித்தெழுந்தபோது இரு இனங்களும் தம்மிடையே மோதினவேயொழிய ரஷ்யப் பெரும்பான்மைத் தேசிய இனத்துடன் எதுவித முரண்பாடும் இருக்கவில்லை. சோவியத் யூனியனில் இருந்து பிரிந்து போகும் கருத்தும் முன்வைக்கப்படவில்லை. 1987 ல் ஆர்மேனிய-அஸர்பைஜானிய இனங்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் சோவியத் அரசு உறுதியுடனும் நியாயமான முறையிலும் தலையிடத் தவறியதால் மோதல்கள் மேலும் உக்கிரமடைந்து 1988-1989 ல் மிக மோசமான நிலையை அடைந்தன. அந்த நிலையில் சோவியத் ராணுவத்தின் தலையீடு மிகவும் குரூரமான முறையில் மேற்கொள்ளப்பட்டது. சோவியத் ராணுவ அடக்குமுறை அஸர்பைஜானியர் மத்தியில் முதன்முறையாக ரஷ்யப் பெரும்பான்மையினருக்கும் சோவியத் யூனியனுக்கும் எதிரான கொதிப்புக்கு காரணமாயிற்று. இதன் தொடர்ச்சியாக அஸர்பைஜானில் மட்டுமன்றி சோவியத் யூனியனின் தென்பகுதியிலுள்ள பிற இஸ்லாமிய பெரும்பான்மை இனத்தவரைக் கொண்ட கூட்டரசுகளிலும் இஸ்லாமிய மத உணர்வும் தீவிர தேசிய உணர்வும் தட்டியெழுப்பப்பட்டுள்ளன. இங்கெல்லாம் கொர்பச்சொவ் தலைமை 'பெரஸ்த்ரோய்க்கா'வும் 'க்ளாஸ்னொஸ்த்'தும் பேசுவதில்லை. மாறாகத் தன் இராணுவ வலிமையையே பிரயோகிக்கின்றது.

www.padippakam.com



இவ்வாறே 1989 நடுப்பகுதியில் சோவியத் தென்மேற்கிலுள்ள ஜோர்ஜியா குடியரசின் மக்கள் தம் குடியரசுக்கு மேலும் அதிக அரசியல்-பொருளாதார சுயாதிபத்தியம் வேண்டி ஊர்வலம் நடத்தியபோது அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. இதன் விளைவாக இன்று ஜோர்ஜிய குடியரசு பிரிந்து போகும் உரிமையை ஜோர்ஜிய மக்கள் வலியுறுத்துமாறான ஒரு நிலவரம் ஏற்பட்டுள்ளது. இங்கேயும் சோவியத் அரசு தன் ராணுவ வலிமையைப் பிரயோகிக்கத் தயங்காது என்றே கூறி வருகிறது. ரொமானியாவில் சாஉசெஸ்கு அரசின் வீழ்ச்சியை அடுத்து ரொமானியாவுடன் இணையும் கோரிக்கை மொல்டேவியக் குடியரசில் எழுச்சி பெற்று வருகிறது. இங்கும் சோவியத் ராணுவம் தலையிடலாம் என்றே கருதப்படுகிறது.

இதே வேளை 1940 ல் ஜேர்மன் பாஸிச மிரட்டல் இருந்த நிலையில் அதனின்றும் தப்ப வேண்டிய அவசியத்தால் சோவியத் யூனியனுடன் தம்மை ஐக்கியப்படுத்திய மூன்று பால்ற்றிக் குடியரசுகளான எஸ்ற்றோனியா, லற்வியா, லித்துவானியா ஆகிய நாடுகளிலும் தேசிய சுயாதிபத்தியத்திற்கான கோரிக்கை பல முனைகளிலும் வலுப்பெற்று வந்தது. பெப்ரவரி 1990 ல் லித்துவானியக் குடியரசின் பாராளுமன்றம் சோவியத் யூனியனில் இருந்து பிரிந்து போகும் உரிமையை பயன்படுத்துவதற்கு முடிவு செய்தது. அதையடுத்து மார்ச் 1990 ல் எஸ்ற்றோனியாவும் அவ்வாறான முடிவுக்கு வந்தது. எஸ்ற்றோனியாவில் உள்ள ரஷ்ய இனத்தவர்களும் பிரிவினைக் கருத்தை ஆதரிக்கின்றனர். லற்வியாவிலும் பிரிவினைக்கான ஆதரவு அதிகமாகவே உள்ள போதிலும் அங்கு ரஷ்ய இனத்தவரின் தொகை நாற்பது சதவீதம் அளவில் இருப்பதால் பிரிவினைக்கான முடிவு சிறிது தாமதமாகலாம். கொர்பச்சொவ் தலைமை கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் விஷயத்தில் காட்டியளவு 'சகிப்புத்தன்மை' யை இந்த விஷயத்திற் காட்ட முடியவில்லை. லித்துவானியாவில் சோவியத் ராணுவ மிரட்டலும் நேரடியான தலையீடும் அங்குள்ள நெருக்கடியை மேலும் உக்கிரமாக்கியுள்ளன. சோவியத் அரசு இந்த நாடுகளை என்றாவது இழந்தேயாக வேண்டும் என்ற நிலையை ஏற்கத் தயாராக இருப்பினும் உடனடியான சூழலில் சோவித் குடியரசுகளில் சோவியத் அரசின் அதிகாரம் பறிபோவதை ஏற்கத் தயாராக இல்லை, லித்துவானியப் பிரிவினையை அடக்கி மறிக்காவிடில் பிற குடியரசுகளில் பிரிவினைக் கோரிக்கை வேகமடையும் என்பது கொர்பச்சொவ் தலைமையின் கணிப்பு. அடக்குமுறையால் மட்டுமே பிரிவினைக் கோரிக்கையை மறிக்க முடியாது என்பது வரலாறு தரும் பாடம்.

### * சோவியத் பொருளாதாரத்தின் மோசமான சீர்குலைவு

சோவியத் சமுதாயத்தின் பொருளாதார நெருக்கடி சமுதாயத்தின் மேன்மட்டங்களைவிட மற்ற அனைவரையுமே கடுமையாகப் பாதித்தது. ஆயினும் சைபீரியாவிலும் பிற பகுதிகளிலும் உள்ள சுரங்கத் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரமோ மிகவும் மோசமானதாக உள்ளது. சுரங்கத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தை அடுத்து இவர்களின் நியாயமான கோரிக்கைகட்கு உடனடிப்

படிப்பகம்

பரிகாரம் தேடுவதாக 1989 நடுப்பகுதியில் வாக்களித்த கொர்பச்சொவ் தலைமை சில துறைகளில் வேலை நிறுத்தங்களைச் சட்ட விரோதமாக்கியதை விட இதுவரை எதையுமே செய்யவில்லை. இப்போது ஸைபீரிய எண்ணெய் தொழிலாளர்கள் மத்தியில் அதிருப்தி வளர்ந்து வருகிறது. ஐந்து வருடங்கட்கு மேலாகப், பெரஸ்த்ரொய்க்கா எதிர்பார்த்த பொருளாதார விளைவுகளைத் தராமையின் விளைவாக சோவியத் பொருளாதாரம் மேலும் சீர்குலைந்துள்ளது. இதற்கு முகங்கொடுக்க கொர்பச்சொவ் தலைமை 'சீர்திருத்தங்களைத்' துரிதப்படுத்த முயல்கிறது. தனியார் உற்பத்தியை உற்சாகப்படுத்தி பொருளாதார சரிவை நிலைநிறுத்தும் இம்முயற்சி அதி வேகமான விலைவாசி ஏற்றத்துக்கும் வேலையின்மையின் அதிகரிப்புக்கும் வழிவகுக்கும் என்பது உறுதி. அதே சமயம் பண்டங்கட்கான தட்டுப்பாட்டை குறுகிய காலத்தில் தீர்க்க முடியாது என்பதால் அரசியல் நெருக்கடி உக்கிரமடைய இடமுண்டு.

* - யார் குற்றவாளிகள்? தவறுகள் திருத்தப்படுமா?

இக்கட்டுரையின் நோக்கம் இன்றைய சோவியத் யூனியனின் நிலைக்கான குற்றத்தை கொர்பச்சொவ் தலை மீது சுமத்துவதல்ல. சோவியத் யூனியனில் ஸ்டாலின் காலத்தில் தவறுகள் இழைக்கப்பட்டன. ஆயினும் சோவியத் யூனியனின் அரசியல் திசைமாற்றமும் பொருளாதாரச் சீரழிவும் குருஷ்செவ் தலைமையின் கீழுமே ஏற்பட்டன. அதன் விளைவுகளைத் திருத்தும் தேவையையே சோவியத் நெருக்கடி உணர்த்துகிறது. இதற்கான ஒரு மாக்ஸிஸ-லெனினிஸத் தீர்வு உள்ளது. அது மிகவும் சிரமமானதும் பாரிய அரசியல் பொறுப்புக்களை வேண்டி நிற்பதுமாகும். மாக்ஸிஸத்தின் இலட்சியங்களினின்று விலகிச் சென்றுள்ள ஒரு அரசியல் தலைமையும் அதிகார வர்க்கமும் அதற்குத் தடையாகவே நிற்பன. இப்பரிகாரம் வெகுஜன அரசியல் அதிகாரத்தை நிறுவுவதன் மூலமே சாத்தியமாகும். இன்றைய சோவியத் சூழலில் இது ஒரு புதிய பாட்டாளிவர்க்கப் புரட்சிக்குச் சமமான ஒரு முயற்சியை வேண்டி நிற்கின்றது. இதற்குத் தலைமை தாங்கி வழிவடத்தும் தகுதி உள்ளவர்கள் சோவியத் அதிகார பீடத்தில் இல்லை. கொர்பச்சொவ் கண்ட வழி அரசியல் பொருளாதார ஆளுமையை மக்களிடம் ஒப்படைத்து அதிகாரத்தைப் பரவலாக்குவதல்ல. மாறாகச் "சந்தை ஆதிக்கத்திற்கும்" பொருளாதாரத்தைப் பணிய வைத்து அரசியல் அதிகாரத்தை ஆளும் வர்க்கத்தின் கையில் நீடிப்பதே. கொர்பச்சொவ் தலைமை கட்டவிழ்த்து விட்ட அரசியற் பூதங்களைக் கட்டுப்படுத்த சோவியத் ஜனாதிபதியின் அதிகாரங்களை அதிகரிக்கும்முகமாக சோவியத் அரசமைப்பில் மாற்றங்கள் புகுத்தப்பட்டுள்ளன. இவை கொர்பச்சொவ் தலைமை வாக்களித்த ஜனநாயக மாற்றங்கள் பற்றிய ஐயங்களை உச்சப்படுத்தியுள்ளன. ஜனநாயகப் போர்வையில் வளர்ச்சி பெற முனையும் குறுகிய தேசியவாதம், ரஷ்யப் பேரினவாதம், குற்றச்செயல்களின் அதிகரிப்பு, சமுதாயச் சீரழிவு ஆகியவற்றை சர்வ வல்லமையுடைய ஒரு ஜனாதிபதி ஆட்சியால் கட்டுப்படுத்த முடியுமா என்பது பிரச்சினைக்குரியது.

www.padippakam.com



சோவியத் யூனியனின் உடனடியான எதிர்காலம் நிச்சயமாக சோவியத் யூனியனுள்ளும் வெளியிலுமுள்ள முற்போக்குச் சக்திகட்குப் பாதகமானதே. ப்ரெஷ்னெவ், க்ருஷ்ச்சொவ் தலைமைகள் ஒப்புக்காகவேனும் மேற்கொண்ட ஏகாதிபத்திய விரோத நிலைப்பாடுகளையும் கொர்பச்சொவ் தலைமை கைவிடத் தயங்காது என்பதும் அமெரிக்காவையும் மேற்கு நாடுகளையும் திருப்தி செய்வதன் மூலம் தன்னை நிலை நிறுத்துவதே அதன் தேவை என்பதும் நாம் மறக்கக் கூடாத உண்மைகள். இவை மேலோட்டமாகப் பார்க்கும் போது கெடுதலாகவே தோன்றினும் மூன்றாமுலக நாடுகளின் புரட்சிகர சக்திகள் மத்தியில் உள்ள பிரமைகளை களைந்து அயல்நாடுகளில் தங்கியிராது சுய சார்பினதும் நாடுகளின் யதார்த்தமான நிலையினதும் அடிப்படையில் போராட்டங்களை முன்னெடுக்கும் சூழ்நிலைக்கு இவை உதவுவன என்பதால் ஈற்றில் நன்மையானவையே. சோவியத் யூனியனின் உள்ளும் வர்க்கப் போராட்டத்தை இம்மாற்றங்கள் மேலும் கூர்மை அடையச் செய்வதும் தவிர்க்க இயலாததே.

புரட்சியின் வளர்ச்சி எப்போதுமே நேர்கோட்டில் செல்வதல்ல. சோவியத் யூனியனில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் சோஷலிஸத்தின் இழப்பு என்பது பற்றிப் பாசாங்குக்கு இடமில்லை. ஆயினும் இந்த இழப்புக்கான அத்திவாரம் 30 வருடம் முன்பு க்ருஷ்ச்சொவ் தலைமையால் இடப்பட்ட ஒன்று என்பதை நாம் மறக்க முடியாது. இந்த முப்பது ஆண்டுகளில் ஏகாதிபத்திய விரோத எழுச்சிகள் பெற்றுள்ள வெற்றிகளையும் நாம் கணிப்பிலெடுப்போமாயின் உலகின் பொதுவான போக்கு புரட்சிக்குச் சாதகமானதே என்பதை உணரலாம்.

*** *** ***

படிப்பகம்

www.padippakam.com



## கிழக்கு ஐரோப்பிய மாற்றங்களும் சோஷலிஸ எதிர்காலமும்

– சி. சிவசேகரம்

தம்மை முற்போக்குவாதிகளாகக் கருதுஞ் சிலரும் கிழக்கு ஐரோப்பிய மாற்றங்கள் பற்றி மனதிற்குள் குதூகலித்துக் கொள்வதை நாம் உணரலாம். சில ட்றொட்ஸ்கியவாதிகள் இவை ஸ்டாலினிஸத்தின் இறுதிச் சடங்குகள் என்று தம்மை மகிழ்வித்துக் கொள்கின்றனர். சமூக ஜனநாயகவாதிகள் என்று தம்மை அழைத்துக் கொள்ளும் சீர்திருத்தவாதிகள் கம்யூனிஸம் ஒழிகிறது என்று மகிழ்ச்சி கொண்டாடுகிறார்கள். கிழக்கு ஐரோப்பாவிலும் சோவியத் யூனியனிலும் கடந்த மூன்று தசாப்தங்கட்கு மேலாக ஏற்பட்டு வந்த மாற்றங்களை விசனத்துடனும் அக்கறையுடனும் விமர்சித்தும் தவறுகளைத் தயங்காமற் கண்டித்தும் வந்த மார்க்ஸிய–லெனினிஸ சக்திகள் இம்மாற்றங்களையிட்டு மனம் மகிழவில்லை தாம் முன்னர் எச்சரித்தவாறு நடந்துவிட்டது என்று அவர்கள் கும்மாளமிடவில்லை. அதே வேளை, எல்லாமே போயிற்று என்று தலையிற் கையை வைத்துக் கொண்டு அவர்கள் ஒப்பாரி வைக்கவுமில்லை. கிழக்கு ஐரோப்பியச் சூழலில் சோஷலிஸத்தின் இன்றைய பின்னடைவு திரிபுவாதத்தின் தோல்வியின் விளைவு என்பதனால் அது மகிழ்ச்சி கொண்டாட வேண்டிய விஷயமல்ல. திரிபுவாதத்தின் தோல்வி மாக்ஸிஸ–லெனினிஸத்தின் தோல்வியல்ல என்பதே மாக்ஸி–லெனினிஸவாதிகளது நிலைப்பாடு. இந்தப் பின்னடைவை எவ்வாறு அதன் எதிர்மறையாக மாற்றி உலகப் புரட்சியை முன்னோக்கி உந்துவது என்பது அவர்களை எதிர்நோக்குஞ் சவால். கிழக்கு ஐரோப்பாவின் பாடங்களைச் சரிவரக் கற்பதன் மூலமே புரட்சிகர இயக்கத்தை முன்னோக்கி உந்தவும் கடந்தகாலத் தவறுகளைத் தவிர்க்கவும் புதிய சாதனைகளை ஈட்டவும் முடியும். இக்கட்டுரையின் நீள வரம்பிற்குள் அதைச் செய்வது சாத்தியமில்லை. இக்கட்டுரையை எழுதும் இந்தத் தனி மனிதருக்கு அதை முழுமையாகச் செய்யும் தகுதியும் இல்லை. எனினும், கிழக்கு ஐரோப்பாவில் இப்போது ஏற்பட்ட மாற்றங்கள் ஏன் ஏற்பட்டன என்பதைப் பற்றிச் சிறிது ஆராய்வதும் இன்றைய உலகச் சூழலில் அவை எத்தகைய எதிர்காலத்திற்கு வழிகாட்டுவன என அலசுவதும் பயனுள்ளது.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் சோஷலிஸ அரசுகள் அதிகாரத்துக்கு வந்த சூழ்நிலையும் ஒவ்வொரு நாட்டினதும் குறிப்பான அம்சங்களும் சோஷலிஸத்தைக் கட்டியெழுப்பும் முயற்சியில் சமுதாய முரண்பாடுகளைக் கையாள்வதில் ஏற்பட்ட சிக்கல்களும் நம் கவனத்துக்குரியன. சோவியத் முன்மாதிரியை அடியொற்றிக் கம்யூனிஸ்ட் கட்சிகள் செயற்பட்டதன் பிரச்சினைகள், சோவியத் ஆளும் வர்க்க நலன்களை முதன்மைப்படுத்தும் முறையில் சோவியத் யூனியனை ஒரு மேலாதிக்க வல்லரசாக்கும் முனைப்புடன் சோவியத் அரசும் கட்சியும் செயற்பட்டமை, உலகக் கம்யூனிஸ இயக்கத்தின் பிளவு;

படிப்பகம்

www.padippakam.com



சோவியத்-அமெரிக்க பெரு வல்லரசுகளின் ஒத்துழைப்பும் போட்டியும் போன்ற பல விஷயங்களையும் நாம் கணிப்பிலெடுக்க வேண்டும். எவ்வாறாயினும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் உள்ள மக்களது அதிருப்தி காரணமாகவே அங்கு இன்றைய பாரிய அரசியல் மாற்றம் சாத்தியமாயிற்று என்பதை மனதிற் கொள்வோமாயின் மக்களது பொருளாதார அரசியல் எதிர்பார்ப்புக்கள் நிறைவு பெறாமையே அடிப்படையான காரணம் என உணர்வோம். புதிய ஆட்சிகளும் அரசியற் போக்குகளும் இந்த எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுமா என்பது ஒரு முக்கியமான கேள்வி. இந்த மாற்றங்களையிட்டுத் திருப்தி தெரிவித்த ஏகாதிபத்தியவாதிகள் வரலாற்றுச் சக்கரத்தைப் பின்னோக்கித் திருப்புவதில் வெற்றி காண்பார்களா என்ற ஒரு கேள்வியும் எழுகிறது. அதை விட முக்கியமாக கிழக்கு ஐரோப்பிய மாற்றங்கள் ஏற்பட்ட காலத்திலேயே ஏகாதிபத்தியத்தின் எதிர்பார்ப்புக்களை ஏமாற்றத்துக்கு உள்ளாக்க மாட்டாவோ என்ற கேள்வியும் இப்போது தலைதூக்கியுள்ளது. இவ்வாறான கேள்விகட்குத் திட்டவட்டமான முறையில் அரசியல் ஆருடம் கூறும் வகையில் பதில் தர முடியாது. ஆயினும் பொதுவான அரசியற் போக்குகளை நம்மாற் சரிவரக் கணிக்க முடியும். இக்கட்டுரை அந்த நோக்கத்திற்கு உதவும் நோக்கில் எழுதப்படுகிறது.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் சோஷலிச அரசுகள் உருவான சூழ்நிலை சோவியத், சீன, வியற்னாமிய, கியூபாச் சூழ்நிலைகளினின்றும் வேறுபட்டது; யூகோஸ்லாவியா தவிர்ந்த சகல நாடுகளிலும் பாசிசத்திற்கு எதிரான யுத்தத்தில் சோவியத் ஆதரவும் யுத்த முயற்சியும் முக்கிய பங்கு வகித்தன. சோவியத் துணையின்றி அந்த நாடுகளில் பாசிச ஜேர்மன் ஆதிக்கமும் அதன் ஆதரவு சக்திகளும் முறியடிக்கப்பட்டிருக்க முடியாது. எனவே, யுத்த முடிவில் சோவியத் யூனியனுக்கு அனுதாபமான ஒரு அரசியற் சூழல் மட்டுமன்றி சோஷலிச கம்யூனிச இயக்கங்களுக்கு மிகுந்த செல்வாக்கும் இருந்தது. யுத்தத்தின் பின்னர் இந்த நாடுகளில் தொழிலாளி வர்க்கக் கட்சிகளின் ஆதிக்கம் ஓங்கியிருந்த போதும் பிற ஜனநாயக முற்போக்குக் கட்சிகளும் வேறுபடும் அளவுகளில் அரசிலும், அரசியலிலும் பங்குபற்றின. தொடக்க நிலையில் கம்யூனிஸ்ட் கட்சிகளின் முதன்மையை ஏற்றுப் பிற முற்போக்குக் கட்சிகளும் ஒத்துழைத்த அரசியல் அமைப்பே அங்கு பரவலாகக் காணப் பட்டது. உலக யுத்தத்தை அடுத்து ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட கொந்தளிப்பான அரசியல் சூழ்நிலை முதலாளித்துவ முறைக்கு ஆப்பு வைக்குமோ என்ற அச்சம் ஏகாதிபத்திய வல்லரசுகளான பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் இருந்தது. பிரான்ஸில் கம்யூனிஸ்ட்டுகளின் செல்வாக்கும் அதே போன்று, இத்தாலியில் கம்யூனிஸ்டுகளின் வலிமையும் கிரேக்க நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தமும் அவர்களைப் பயமுறுத்தின. யுத்தத்தின் விளைவாக ஏற்பட்ட ஜேர்மன் பொருளாதாரச் சீரழிவும் அவர்களது கலக்கத்திற்கு மேலுங் காரணமாயின. இந்த நிலையில் இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவு இன்னொரு பெரும் யுத்தமும் கிளர்ச்சியும் கலந்த சூழலுக்கு

படிப்பகம்

www.padippakam.com



வழிகோலுமோ என்ற பீதியின் விளைவாக சோவியத் யூனியனுடன் சுமுகமான உடன்பாட்டுக்கு வந்தனர். ஜேர்மன் பிரிவினை, கிழக்கு ஐரோப்பாவில் சோவியத் யூனியனுக்கு அனுதாபமான அரசியல் மாற்றங்களிற் தலையிடாமை என்பன இச்சூழலின் விளைவுகளே. தமது சர்வதேச நிலவரம் சற்றே ஸ்திரமடைந்தவுடன் கிழக்கு ஐரோப்பாவையும் சோவியத் யூனியனையும் தனிமைப்படுத்தும் நோக்கில் 'இரும்புத்திரை' ஒன்றைப்பிரகடனம் செய்த, செடுபிடி யுத்தத்தை அமெரிக்க, பிரித்தானிய ஏகாதிபத்தியவாத அரசுகளே தொடக்கி வைத்தன.

கிழக்கு ஐரோப்பாவில் ஏற்பட்ட பாரிய அரசியல் மாற்றங்கள் இத்தகைய சர்வதேசப் பின்னணியில் அந்த நாடுகளில் மக்களது பாஸிச விரோதப் போராட்டத்தினதும் ஜனநாயக சமுதாய மாற்றம் ஒன்றுக்கான விருப்பத்தினதும் அடிப்படையிலேயே நிகழ்ந்தன. சோவியத் யூனியனைத் தனிமைப்படுத்திப் பலவீனப்படுத்தும் ஏகாதிபத்திய முயற்சியும் அதன் விளைவான செடுபிடி யுத்தமும் சோவியத் யூனியனிலும் கிழக்கு ஐரோப்பாவிலும் அச்சுறுத்தலுக்கு முகங் கொடுத்து மாறான சில நடவடிக்கைகளை நிர்ப்பந்தித்தன. இதன் தொடர் விளைவாகவே கம்யூனிஸ்டுகள் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை வலியுறுத்துமாறு தமது அரசியல் அதிகாரத்தை வலிமைப்படுத்த நேரிட்டது. அடிப்படையில் அவசியமான சரியான நடவடிக்கைகளாகவே இருந்த போதும் இவை மேற்கொள்ளப்பட்ட முறையில் பல தவறுகளும் பலவீனங்களும் இருந்தன. இவற்றுள் முக்கியமானவை பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்துடன் மக்கள் ஜனநாயகத்தை இணைத்து விருத்தி செய்வதையும் ஒவ்வொரு நாட்டிலும் சோஷலிஸ நிர்மாணத்தை அதன் ஸ்தூல நிலவரங்களுக்கு ஏற்ப மேற்கொள்வதையும் பற்றியன எனலாம்.

செடுபிடி யுத்தத்தின் சூழலில் ஸ்டாலின் தலைமையிலான சோவியத் அரசும் கம்யூனிஸ்ட் கட்சியும் சோவியத் யூனியனையும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளையும் நெருங்கப் பிணைத்த ஒரு வலிய சோஷலிஸ முகாமைக் கட்டியெழுப்பி உலக சோஷலிஸத்தையும் சோவியத் சோஷலிஸப் பொருளாதார நிர்மாணத்தையும் வலுப்படுத்த முற்பட்டமை மிகவும் நியாயமானதே. ஆயினும் சோவியத் யூனியனிற் போலன்றி வேறுபடும் அளவுகளில் இன்னொரு வலிய சக்தியின் துணையுடன் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய கிழக்கு ஐரோப்பியக் கட்சிகள் தமது அரசியற் பலத்தை நிலைநிறுத்துவதில் தமது தேசிய நிலவரங்களுக்கு ஏற்ப இயங்கத் தவறியமை அவற்றின் பெரும் பலவீனமாயிற்று. சோவியத் முன் மாதிரியை ஒரு வழிகாட்டியாகக் கொள்வது சரியானதேயெனினும் அதையே அடியொற்றித் தம் நாடுகளிலும் செயற்பட்டுச் சோவியத் யூனியனின் நலன்களைத் தமது நாடுகளின் குறிப்பான தேவைகளை விட முக்கியப்படுத்தும் ஒரு முனைப்பு படிப்படியாக இந்த நாடுகளின் கட்சிகளதும் அரசுகளதும் தலைமைகளில் விருத்தியடைந்தது. முக்கியமாக வெகுஜன ஆதரவு குறைவாக இருந்த கட்சிகளிடையே இப்போக்கு அதிகமாகக் காணப்பட்டது எனலாம். இக்கட்சிகள்

படிப்பகம்

www.padippakam.com



மேலும் மேலும் சோவியத் அதிகாரத்தையே சார்ந்து தங்களை நிலைநிறுத்த முயன்றன. சோவியத் ஆதரவு இல்லாமலேயே இயங்கக் கூடிய வலிமை கொண்ட பிற ஐரோப்பியக் கம்யூனிஸ்ட் கட்சிகளுங் கூடக் குருட்டுத்தனமாகச் சோவியத் கட்சியின் தவறான போக்கைப் பின்பற்றியதை நாம் கண்டிருக்கி றோம். எனவே சோவியத் ஆதரவு அவசியமான நிலையிலிருந்த கட்சிகளின் நிலையை ஓரளவு அனுதாபத்துடனேயே நோக்க வேண்டும். எவ்வாறாயினும் தமது நாடுகளின் ஸ்தூல நிலைகட்கு ஏற்ப இவை இயங்கத் தவறியதன் குற்றம் முக்கியமாக அந்தந்த நாடுகளின் கட்சிகளதும் அரசுகளதும் தலைமைகளையே சாரும்.

கிழக்கு ஜேர்மனி தவிர்ந்த பிற கிழக்கு ஐரோப்பிய சோஉஷலிஸ நாடுகளில் ஏற்பட்ட சமுதாய மாற்றத்துக்கு ஒரு முற்போக்கான அரசியற் சார்பு சமுதாயத்தில் இருந்தது. எனவே அங்கு சோஉஷலிஸ முனைப்புடைய அரசுக்கு ஓரளவு பலமான அத்திவாரம் இருந்ததெனலாம். பாஸிஸத்தினின்று ஜேர்மனி விடுவிக்கப்பட்ட உடனடிக் காரணம் ஜேர்மன் பாஸிஸ அரசின் யுத்தத்தின் தோல்வியே அல்லாமல் பாஸிஸத்திற்கெதிரான உள்நாட்டுச் சக்திகளின் எழுச்சி அல்ல. இந்நிலையில் கிழக்கு ஜேர்மனியில் தேசியவாதமும் பிற்போக்குச் சக்தி களும் முற்றாக ஒடுங்கி விடவில்லை. ரஉஷ்யப்படைகள் கிழக்கு ஜேர்மனியிலும் அமெரிக்க - பிரித்தானிய - பிரெஞ்சு படைகள் மேற்கிலும் நிலைநிறுத்தப்பட் டமை ஒருபுறம் பாஸிஸத்தினதும் ஜேர்மன் தேசியவாதத்தினதும் எழுச்சியை மட்டுப்படுத்தினாலும், முறியடிக்கப்பட்ட பிற்போக்கு சக்திகளைக் கட்டுப்படுத்த அவை மட்டுமே போதியனவல்ல. ரஉஷ்யப் படைகள் நிலைநிறுத்தப்பட்டதை எதிர்த்துக் கிழக்கு ஜேர்மனியில் ஏற்பட்ட கிளர்ச்சி எதிர்பார்த்திருக்க வேண் டியதே. அது சோவியத் படைகளால் அடக்கப்பட்டது அன்றைய சூழலிற் தவறானதுமல்ல. எவ்வாறாயினும், கிழக்கு ஜேர்மனியின் சமுதாய அமைப்பில் சோஉஷலிஸ அரசு ஏற்படுத்திய மாற்றங்கள் மனிதாபிமான நோக்கில் வரவேற் கத்தக்கனவும் முற்போக்கானவையுமாகும். ஜேர்மன் அரசியலில் முறபோக் கான சிந்தனையை மீண்டும் நிலைநிறுவியதுடன் தேசிய, இன வேறுபாடுகளற்ற ஒரு சர்வதேசப் பார்வைக்கு வழிவூட்டிய இம்மாற்றங்களை மேலுங் கட்டி யெழுப்ப முடியாமற் போனது ஏனென்பதற்கான புறக் காரணங்கள் குருஉஷ்சேவ் தலைமையின் கீழான புதிய முனைப்புடனேயே அதிகம் தொடர் புடையவை.

1956 இல் ஹங்கேரியில் ஏற்பட்ட கிளர்ச்சி அங்கு ஊடுருவியிருந்த பிற் போக்குச் சக்திகளையும் சிந்தனைகளையும் உரிய காலத்திற் சரிவரக் கையாளாமையின் விளைவுகளே. மறுபுறம் 1957 இல் போலந்தின் அரசின் தவறுகளாலும் பொருளாதாரத்தின் குறைபாடுகளாலும் ஏற்பட்ட நியாயமான மக்கள் எழுச்சியை அடக்குவதற்கு சோவியத் யூனியன் முற்பட்டபோது சீனப் பிரதமர் ஜோ என்லாயின் தலையீடே அப்பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்க்க உதவியது. சோவியத் யூனியனின் புதிய அரசியற் தலைமை, ஸ்டாலின்

படிப்பகம்

www.padippakam.com



மீது பலவிதமான குற்றச்சாட்டுக்களைச் சுமத்திய போதும், ஸ்டாலினின் காலத்தில், யுத்தத்தால் ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்யும் அவசியத்தின் காரணமாகவும் கெடுபிடி யுத்தத்தாலும் வேறு வழிகளிலும் சோவியத் யூனியனைத் தனிமைப்படுத்தும் ஏகாதிபத்திய முயற்சிகளின் காரணமாகவும், கிழக்கு ஐரோப்பிய நலன்களைச் சோவியத் நலன்களுடன் பிணைக்க எடுத்த முயற்சிகளைவிடப் பன்மடங்கு அதிக அளவில் இந்த நாடுகளைச் சோவியத் யூனியனுடன் நெருங்கிப் பிணைக்க முற்பட்டது. சோஷலிஸ முகாமைப் படிப்படியாக ஒரு புதிய சாம்ராஜ்யமாகவே மாற்றும் போக்கு பிரஷ்னேவ் யுகத்தில் உச்ச கட்டத்தையடைந்தது.

குருட்டுத்தனமாகச் சோவியத் யூனியனைப் பின்பற்றிப் பாதிக்கப்பட்டுவிட்ட கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் கட்சித் தலைமைகளும் அரசாங்கங்களும் மக்களது தேசிய உணர்வுகளைச் சரியாகக் கணித்து உரிய மதிப்பளிக்கவும் பொறுப்புடன் கையாளவும் தவறின. 1968 இல் நிகழ்ந்த செக்கோஸ்லாவாக்கிய ஆக்கிரமிப்பு எவ்வளவு குரூரமான முறையில் சோவியத் தலைமையாற் செயற்பட முடியுமென்பதையே காட்டியது. அன்றைய செக்கோஸ்லாவாக்கியக் கட்சியின் முனைப்புப் பற்றிச் சீனா, அல்பானியா, ரொமானியா போன்ற நாடுகள் முரண்பட்ட போதும், செக்கோஸ்லாவாக்கியாவின் உள்நாட்டுப் பிரச்சினையில் வோர்சோ உடன்படிக்கை நாடுகளின் பேரில் நடந்த சோவியத் ஆக்கிரமிப்பைத் தயங்காது கண்டித்தன. இதன் விளைவாக பிரஷ்னேவ் தலைமை சீனா மீது தன் மிரட்டலை அதிகரித்ததுடன் சீன-ருஷ்ய எல்லையில் மோதல்கட்கும் வழிவகுத்தது. அல்பானியா, ரொமானியா மீதும் பலவகையான மிரட்டல்கள் பாவிக்கப்பட்டன.

ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களையும் உலகின் விடுதலைப் போராட்டங்களையும் சுயலாபத்திற்காகப் பயன்படுத்திய குருஷ்சேவ், பிரெஷ்னேவ் தலைமைகள் அணிசேரா நாடுகள் இயக்கம் போன்ற மூன்றாமுலக இயக்கங்களைப் பலவீனப்படுத்தி மூன்றாமுலக நாடுகளின் பொருளாதார நலன்களை வலியுறுத்தும் சகல முயற்சிகளையும் முறியடிப்பதில் அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் சேர்ந்தே செயற்பட்டன. இதன் விளைவாக, வீழ்ச்சியை எதிர்நோக்கிய ஏகாதிபத்தியவாதிகளால் மூன்றாமுலகின் மீது தம் நவகொலனித்துவப் பிடிப்பை மீண்டும் பலப்படுத்துவது எளிதாயிற்று. இதில் மூன்றாமுலகின் புரட்சிகர சக்திகளதும் இடதுசாரி இயக்கங்களதும் தவறுகளையும் நாம் புறக்கணிக்க முடியாது. எவ்வாறாயினும் சோவியத் யூனியனின் தவறான போக்கு சோவியத் யூனியனையும் பலவீனப்படுத்தியது. தன்னை ஒரு உலகப் பெருவல்லரசாகவும் ராணுவ மேலாதிக்க சக்தியாகவும் வளர்க்க முற்பட்ட சோவியத் அரசின் பொருளாதாரச் சீர்குலைவுக்கு சோவியத் ராணுவத்தின் வளர்ச்சியும் பங்களித்தது. சோவியத் அரசின் சர்வதேசிய முக்கியத்துவம் சர்வதேச அரங்கில் மார்க்சிய இயக்கத்தின் மீதும் ஏகாதிபத்திய விரோதப் போராட்டங்களின் மீதும் தங்கியிராமல் சோவியத் ராணுவ வலிமை மீதே

படிப்பகம்

www.padippakam.com



தங்கியிருந்தது. இது மேலும் மேலும் சோவியத் யூனியனை ஒரு மேலாதிக்க வல்லரசு என்ற நிலைக்குள் இழுக்கவே உதவியது. சோவியத் அரசின் நலன்களுடன் தம்மை நிபந்தனையின்றிப் பிணைத்துக் கொண்ட கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் அரசியலும் பொருளாதாரமும் சோவியத் யூனியனின் அரசியற் பொருளாதார நெருக்கடிகளாற் பாதிப்புக்குள்ளாயின.

மூன்றாமுலக நாடுகள் தம் உற்பத்திப் பொருட்களுக்கும் மூலவளங்களுக்கும் நியாயமான விலைக்காகப் போராடிய போது சோவியத் யூனியன் தர மறுத்த ஒத்துழைப்பு உண்மையில் ஏகாதிபத்தியவாதிகட்கே கூடிய நலனை அளித்தது. தமது பொருளாதார, ராணுவ, அரசியல் ஆதிக்கத்தின் மூலம் மூன்றாமுலகின் சுரண்டலை உக்கிரப்படுத்திய ஏகாதிபத்தியம் தன் பொருளாதார நிலைகுலைவைத் தடுத்துத் தன் ஆதிக்கத்தை ஸ்திரப்படுத்த முடியுமாயிற்று. 1960 களின் பின் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சி மேலை முதலாளித்துவத்துடன் ஒப்பிடுகையிற் பலவீனமானதாகவே இருந்தது. மேலை முதலாளித்துவத்தின் புதிய வளர்ச்சியும் நுகர்வுப் பொருட்களின் நெருக்கமும் கிழக்கு ஐரோப்பிய மக்களின் மனதில் குறைபாடுகட்குக் காரணமாயின: மேற்கின் பொருளாதார வளத்தின் காரணங்களை அவர்களாற் புரிந்து கொள்ள இயலாமையை விட முக்கியமாக அவர்களிடமிருந்து அந்நியப்பட்டுப் போன சோவியத் அடிவருடி அரசுகளே அவர்களது கொதிப்புணர்வுக்குக் காரணமாயின: இச்சூழ்நிலையை மேலை நாடுகளின் ஊடுருவற் சக்திகள் பயன்படுத்தியதும் உண்மையே. ஆயினும் அடிப்படையான பிரச்சினைகள் இச்சமுதாயங்களின் உள்ளே இருந்த சமுதாய முரண்பாடுகள் தொடர்பானவை என்பது முக்கியமான உண்மை.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பாட்டாளி வர்க்கத்தின் பேராலும் அதன் கட்சியின் பேராலும் சோவியத் அதிகார வர்க்கத்தின் அடிவருடிகளின் அதிகாரமாக மாறிவிட்ட நிலையில், மக்கள் ஜனநாயகம் மிகவும் நலிந்து விட்டது. மக்கள் ஜனநாயகம் விருத்தியடைய முடியாத நிலையில் இந்த நாடுகளின் மக்களது நோக்கில், மேற்குலகின் பூஉர்ஷுவா -ஜனநாயகமே ஜனநாயகமாகவும் முதலாளித்துவ மார்க்கமே பொருளாதார சுபீட்சத்திற்கான மார்க்கமாகவும் தோன்றின. போலந்தின் பொருளாதார நெருக்கடி உக்கிரமடைந்த காரணத்தால் 1980 - 81 இல் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியை சோவியத் ராணுவத்தின் பின்னணியில் போலிஷ் அரசாற் சமாளிக்க முடிந்ததேயொழிய நிரந்தரமாக அடக்க முடியவில்லை. கம்யூனிஸ்ட் கட்சி மீதான நம்பிக்கை தளர்ந்த சூழ்நிலையில் கத்தோலிக்க நாடான போலந்தில் வத்திக்கானின் உதவியுடன் பிற்போக்கு சக்திகளின் எழுச்சி எளிதிற் சாத்தியமாயிற்று. சோவியத் யூனியனின் உள் நெருக்கடிகளைச் சமாளிக்க, பிரெஷ்னேவ் யுகத்தின் பின் வந்த புதிய தலைமை எடுத்த நடவடிக்கைகள், சோவியத் யூனியனின் பலவீனமாகவே கிழக்கு ஐரோப்பிய நாடுகளிற் காணப்பட்டன. அவற்றை இவ்வாறே அடையாளங் கண்ட ஏகாதிபத்தியவாதிகளும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் அரச விரோத சக்திகளை ஊக்குவித்தன. போலந்தில்

படிப்பகம்

www.padippakam.com



கம்யூனிஸ்ட் கட்சி அரசின் வீழ்ச்சியை அடுத்துப் பிற ஐரோப்பிய நாடுகளிலும் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. இவை மக்களது நியாயமான கோபத்தின் விளைவானவை என்பதை யாரும் மறுக்க முடியாது. எனினும் ஏகாதிபத்தியவாதிகளது ஊடுருவலும் ஊக்குவித்தலும் இருந்ததும் உண்மையே. ஏகாதிபத்தியத்துடன் சமரசம் செய்து சோவியத் யூனியனின் பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க விரும்பிய கொர்ப்பச்சொவ் தலைமை தன் 'கிளாஸ்னொஸ்த்', 'பெரெஸ்த்றொய்க்கா' கொள்கைகளைக் கிழக்கு ஐரோப்பாவிலும் கடைப்பிடிப்பதாகக் காட்டும் நோக்கில் தனக்கு விசுவாசமாயிருந்த கிழக்கு ஐரோப்பியக் கட்சிகள்; அரசுகளின் தலைமைகட்குத் தன் வழமையான ஆதரவைத் தர மறுத்தது. இதன் விளைவாகச் சில மாதங்களிலேயே சகல கிழக்கு ஐரோப்பிய அரசுகளும் கவிழ்ந்தன.

இன்று போலந்தில் ஒரு வலதுசாரி அரசு ஏற்பட்டுள்ளது. வோர்சா உடன்படிக்கை மட்டுமன்றிக் கொமிகொன் பொருளாதார ஒத்துழைப்பும் சின்னாபின்னமாகிவிட்டது. ஜேர்மன் ஐக்கியம் ஏற்பட்டுள்ளது. கிழக்கு ஜேர்மனியில் வலதுசாரிகளும் குறுகிய தேசியவாதிகளும் நவபாஸிஸத்தினரும் எழுச்சி ஜேர்மனியின் பிற்போக்கு அரசிற்கு மேலும் வலுவூட்டியுள்ளது. ஹங்கேரியிலும் செக்கொஸ்லாவாக்கியாவிலும் முதலாளித்துவச் சார்பான அரசுகள் ஏற்பட்டுள்ளன. பல்கேரியாவிலும் ரொமானியாவிலும் சோஷலிஸ சக்திகளின் பலம் அதிகமாகவே இருந்ததன் விளைவாக வலதுசாரிகளால் உடனடியாக அதிகாரத்தைக் கைப்பற்ற முடியவில்லை. ஆயினும் கிளர்ச்சிகளும் கலவரங்களும் அவர்களால் ஊக்குவிக்கப்படுகின்றன. சோவியத் ஆதிக்கத்திற்குட்படாத அல்பானியாவிலும் கிழக்கு ஐரோப்பிய மாற்றங்கள் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. உலக நாடுகளிடமிருந்து தன்னைத் தனிமைப்படுத்திக் கொண்ட அல்பானியாவின் பின்தங்கிய பொருளாதாரமும் அதைச் சூழவுள்ள நாடுகளின் 'விருத்தி'யும் இதற்குரிய காரணங்களுள் அடங்கும். ஆயினும் அல்பானியாவில் வலதுசாரிகள் உடனடியாக அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாத நிலையில் தேர்தல்களைப் பின்போடுவதையே விரும்புகின்றனர். யூகோஸ்லாவியாவின் பொருளாதார நெருக்கடி மிக நீண்ட காலமாகவே இருந்து வருவது, அணிசாராத யூகோஸ்லாவியாவை நெருக்கடிக்கு உள்ளாக்கும் அவசியம் மேலை நாடுகட்கு இருக்கவில்லை. யூகோஸ்லாவியாவின் பொருளாதார நெருக்கடியின் வளர்ச்சி அதன் தேசிய இன முரண்பாடுகளை இன்று கூர்மைப்படுத்தி நாட்டைப் பிளவுபடுத்த முற்படுகிறது.

தொகுத்துக் கூறின், கிழக்கு ஐரோப்பாவிலும் சோவியத் யூனியனிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் அங்கு பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் சரிவர நடைமுறைப்படுத்தப்படாமையால், முக்கியமாக மக்கள் ஜனநாயகம் விருத்தி செய்யப்படாமையால், ஏற்பட்ட நெருக்கடியின் விளைவுகள் எனலாம். சோவியத் தலைமையும் அதன் உடந்தையான திரிபுவாதத் தலைமைகளும் ஏகாதிபத்திய விரோத, சோஷலிஸப் புரட்சிகர இயக்கங்களையும் போராட்டங்களையும் பலவீனப்படுத்தியதன் விளைவாகத் தம்மையும் பலவீனப்படுத்திக் கொண்டன. இதனால் ஏகாதிபத்தியம் தற்காலிகமாகத் தன் நெருக்கடியினின்று மீண்டு தன்

படிப்பகம்

www.padippakam.com



ஆதிக்கத்தை நிலைநிறுத்தியிருக்கிறது. திரிபுவாதக் கம்யூனிஸ்ட் தலைமைகளது தவறுகளின் விளைவாகக் கிழக்கு ஐரோப்பிய மக்கள் மத்தியில் சோஷலிஸம் பற்றிய அவநம்பிக்கை ஓங்கியுள்ளது. பூர்ஷ்வா ஜனநாயகமும் முதலாளித்துவமும் பற்றிய அவர்களது நம்பிக்கை அரசியல் மாற்றங்களுக்கு வழிவகுத்துள்ளது. அதே வேளை இம்மாற்றங்களையொட்டிக் குறுகிய தேசியவாதம் மட்டுமன்றிப் பாஸிஸமும் இனவெறியும் தலைதூக்கியுள்ளன.

முதலாளித்துவத்தால் தமது பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என எதிர்பார்க்கும் கிழக்கு ஐரோப்பிய மக்கள் ஏகாதிபத்தியத்தின் சுயரூபத்தை அடையாளங் காண அதிக காலம் போகாது. பூர்ஷ்வா ஜனநாயகம் உண்மையான ஜனநாயகமல்ல என்பதை அவர்கள் உணரச் சிறிது அதிக காலம் எடுக்கலாம். எவ்வாறாயினும் இந்த நாடுகளின் சோஷலிஸ, முற்போக்கு சக்திகள் முன் உள்ள பணி மிகப் பெரியது. பழைய அரசியற், பொருளாதாரத் தவறுகளை அடையாளங்கண்டு, மக்கள் ஜனநாயகத்தையும் சோஷலிஸப் பொருளாதாரத்தையும் ஒவ்வொரு நாட்டினதும் குறிப்பான சூழ்நிலைக்கேற்பக் கட்டியெழுப்பும் ஒரு திட்டத்தை அவர்கள் வகுக்க வேண்டும். இது ஒரு புதிய சோஷலிஸ மக்கள் ஜனநாயகப் புரட்சி மூலமே சாத்தியமாகும். கிழக்கு ஐரோப்பாவின் எதிர்காலத்தை மேலை முதலாளித்துவத்துடன் பிணைக்கும் போக்குகளை எதிர்த்து மூன்றாமுலகின் சுரண்டப்படும் நாடுகளதும், மக்களதும் எழுச்சியுடன் ,தம்மைப் பிணைப்பதன் மூலமே அவர்களால் தமது வெற்றியை உறுதிப்படுத்த முடியும். இந்தவகையில், உலக சோஷலிஸ மாற்றத்தை முன்னெடுப்பதில் மூன்றாமுலக நாடுகளின் ஏகாதிபத்திய விரோத, சோஷலிஸ சக்திகளின் போராட்ட ஐக்கியமே உடனடியான எதிர்காலத்தில் அதி முக்கியமான பங்களிக்கும் என்பது என் எதிர்பார்ப்பு.

கிழக்கு ஐரோப்பாவில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மார்க்ஸிய சோஷலிஸ இயக்கத்தின் தவறான போக்குகளின் விளைவுகள். இவற்றையிட்டுக் குதூகலிக்கும் ஏகாதிபத்தியவாதிகளால் கிழக்கு ஐரோப்பாவின் புதிய நெருக்கடிகட்குத் தீர்வு காண முடியாது. கிழக்கு ஐரோப்பாவுக்குத் தம் உலகச் சுரண்டலிற் பங்கு வழங்க முடியாமல், கிழக்கு ஐரோப்பாவைத் தம் சுரண்டலுக்கு உட்படுத்த அவர்கள் முற்படுவது இயல்பானதே. இது ஏகாதிபத்தியத்தின் நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்தும். இதன் விளைவாக மூன்றாமுலகின் சுரண்டலும் மேலும் உக்கிரமடையும். இது மேலும் போராட்டங்கட்கே வழிவகுக்கும். இப்போராட்டங்களை ஒருமுகப்படுத்தி மூன்றாமுலகின் நாடுகளதும் தேசிய இனங்களதும் சுரண்டப்படும் மக்களதும் ஐக்கியத்தை வலியுறுத்தும் திசையிற் செயற்படுவதே சகல முற்போக்குச் சக்திகளதும் முக்கியமான வரலாற்றுப் பணியாகும்.

படிப்பகம்

www.padippakam.com

சோஷலிசத்தின் சாதகங்களும் பாதகங்களும்

(சீனா அறிஞர் சீசின் அவர்கள் ஜப்பான் பேராசிரியர் யபுகீ சுசுமுவுடன் நடத்திய உரையாடல்)

6) இரண்டு அமைப்புக்களிலும் உயர்வானது எது?
(இரண்டு அமைப்புக்கள்: முதலாளியம், சோஷலிசம்).

சுசுமு: நீங்கள் முதலாளித்துவ கட்டில்லா சந்தை முறையை நம்பவில்லை போல் தெரிகிறது.

சீசின்: இல்லை, நான் நம்பவில்லை. பத்து வருடங்களுக்கு முன் நான் இந்த கட்டில்லா சந்தைப் பொருளாதாரம் சிறந்தது என்று நம்பியவன்தான். இக்கருத்தை அமெரிக்காவின் பீ.ஏ.சாமுவெல்சன் அவர்களுடைய கட்டுரைகளைப் படித்து பெற்றுக் கொண்டவன் நான்.

ஆனால் கடந்த பத்து வருடங்களாக சீனா, கிழக்கு ஐரோப்பா — மற்றும் சோவியத் யூனியன் ஆகிய நாடுகளில் ஏற்பட்ட பொருளாதாரச் சீர்திருத்தங்களை அவதானித்ததன் மூலமும் அவற்றை ஒத்து நோக்கியதன் மூலமும் பொருளாதாரக் கோட்பாடுகளைப் பற்றி ஆழமாகக் கற்றதன் மூலமும் முழு அளவில் பார்க்குமிடத்து சோஷலிச பொருளாதாரம் நிச்சயமாக முதலாளித்துவப் பொருளாதாரத்திலும் பார்க்க மிகவும் பலம் வாய்ந்தது என்ற முடிவுக்கு வந்துள்ளேன்.

சுசுமு: ஓ........... எதைக் கொண்டு அப்படிச் சொல்லுகிறீர்கள்?

சீசின்: நல்லது. ஜப்பானிய பொருளாதார நிபுணர்கள் இதைப்பற்றி சில அனுபவங்களைக் கொண்டிருப்பார்கள் என எண்ணுகிறேன். ஜப்பானிய பொருளாதார நிபுணர் ஒருவரினால் தொகுக்கப்பட்ட "நவீன ஜப்பானிய பொருளாதாரம்" என்ற புத்தகத்தில் 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பின்னடைந்த ஜப்பானிய பொருளாதாரத்தை மிக விரைவாக கட்டி எழுப்புவதற்காக அரசு சோஷலிச பொருளாதார முறையை ஜப்பான் அறிமுகப்படுத்தியது. இந்த அமைப்பில் முக்கிய பொருளாதார நிறுவனங்கள் எல்லாம் அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு அவை அரசின் மேற்கோள்களுக்கு அமைய இயங்கச் செய்யப்பட்டன. இரண்டாம் உலக யுத்தத்தைத் தொடர்ந்து "மேற்கு ஐரோப்பாவின் பல நாடுகளினாலும் அமெரிக்காவினாலும் மன்னித்து விடப்பட்ட" ஜப்பான் மேற்கு நாடுகளின் சுதந்திர சந்தை முறையினின்றும் வேறுபட்ட அரசினால் திட்டமிடப்படும் ஒரு கொள்கையை அறிமுகப்படுத்தியது.

ஜப்பான் சீனாவின் அமைப்புக்கு மாறுபட்ட கொள்கையுடைய முதலாளித்துவ அமைப்பு முறையைக் கொண்டிருக்கிறது. அரசுடமை முறையும் திட்டமிடப்பட்ட பொருளாதார முறையும் மிகச் சிறந்த அம்சங்களைக் கொண்டிருக்காவிடின் ஜப்பான் தன்னுடைய பொருளாதாரம் மிகவும் பலம் வாய்ந்ததாக இல்லாதபோது ஏன் இம்முறையைப் பின்பற்றியது?

படிப்பகம்

www.padippakam.com

சு: அது சரி அந்தப் புத்தகம் எனக்கும் பரிச்சயமானதுதான்....

சீ: நல்லது சீனாவின் தற்போதைய பொருளாதாரப் பிரச்சினை எடுத்துப் பார்ப்போம். தற்போதைய பொருளாதாரப் பிரச்சினை ஒரு பொருளாதார சகட ஓட்டத்தின் விளைவே என்பதை நாங்கள் ஒரு பொருளாதார நிபுணர் என்ற வகையில் விளங்கிக் கொள்ளக் கூடும். சீனாவில் 1989 ல் ஏற்பட்ட மந்தமான பொருளாதார நிலைமை முதலாளித்துவ நாடுகளில் ஏற்பட்டிருக்குமானால் அந்த நாடுகளிலெல்லாம் வங்கிகள் வர்த்தக நிலையங்கள் கடைகள் ஆகியவை மூடப்படுவதுடன் வேலை இல்லாத் திண்டாட்டம், வங்குரோத்து நிலைமை பங்குச் சந்தை முறிவு ஆகியவை மட்டுமல்ல சமூகக் குழப்பங்களும் ஏற்பட்டிருக்கும். எனினும் சீனா மகத்தான அரச திட்டப் பொருளாதாரக் கொள்கையில் (பேரட்ட பொருளாதாரக் கொள்கை) தங்கியிருந்ததன் மூலம் குழப்பம் உருவாகக் கூடிய மாற்றங்களை செய்யலாம் எதிர்த்து சமாளித்து தேசிய பொருளாதாரத்தை உறுதிப்படுத்தியதுடன் சமூக ஸ்திரத் தன்மையையும் நிலை நாட்டியது. சிலர் சொன்னது போல் நாங்கள் சோஉஷலிசத்தில் தங்கியிருக்காமல் 1987 - 1989 காலப் பகுதியில் எமது பொருளாதார அமைப்பு முறையில் மாற்றங்களை ஏற்படுத்தி முற்று முழுதான தனியுடமை ஆக்கல், சுதந்திரமாக்குதல், முற்று முழுதான பங்கு பெறுகை முறை ஆகிய கொள்கைகளைப் பின்பற்றியிருந்தால் மேற்படி பொருளாதாரச் சுழற்சி (பொருளாதார சகட ஓட்டம்) விளைவு முழுவதும் வித்தியாசமாக இருந்திருக்கும்.

7) என் சோஉஷலிச அமைப்பில் கூட பொருளாதார சுழற்சி (பொருளாதார சகட ஓட்டம்) ஏற்படுகிறது?

சு: என் சோஉஷலிச அமைப்பில் கூட பொருளாதார சுழற்சி (பொருளாதார சகட ஓட்டம்) ஏற்படுகிறது?

சீ: பெரிய விளக்கங்களைக் கொடுக்காமல் இந்த கேள்விக்குரிய பதிலை முழுமையாக விளங்க முடியாது. சோஉஷலிச அமைப்பில் கூட "பொருள் பொருளாதாரம்" உண்டு. சீனாவில் சீர்திருத்தங்களின் ஆரம்பக் கட்டங்களிலிருந்தே வர்த்தக முயற்சிகளின் வாய்ப்பும் வசதிகளும் கூடிக்கொண்டே வருகிறது. எல்லாப் பொருட்களின் உற்பத்தியும் சில பொதுவான பொருளாதார விதிகளைப் பின்பற்றியே நடைபெற வேண்டும் என மாவோ கூறினார். அந்தக் கால கட்டத்தில் அவர் குறிப்பிட்டவை முக்கியமாக விலைகளையும் நாணய மாற்றையும் கட்டுப்படுத்தும் விதிகளைப் பற்றியே ஆகும். எனது நோக்கில் காலத்துக்குக் காலம் ஏற்படும் தேவை - விநியோகம் ஆகியவற்றின் விரிவடைவும் சுருக்கமும் (கேள்வி நிரம்பல் விரிவுச் சுருக்க சகட ஓட்டம்) கூட பொருள் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தும் ஒரு உலகளாவிய விதியாகும்.

சு: அப்படியாயின் சோஉஷலிசப் பொருளாதார முறையின் மேலான நன்மைதான் என்ன?

படிப்பகம்

www.padippakam.com

சீ: பலம் பொருந்திய அரச திட்டப் பொருளாதாரம் (பேரண்ட பொருளாதாரம்). காரணமாக சோஷலிசம் பொருள் பொருளாதாரத்தின் சுழற்சியை (சகட ஓட்டம்) ஒரு குறிப்பிட்ட அளவுக்குக் கட்டுப்படுத்துவதன் மூலம் அதன் (பொருள் பொருளாதார சகட ஓட்டம்) அழிவுத் தாக்கத்தை குறைக்கக் கூடியதாகவும் இருக்கின்றது.

பிரதானமாக இரண்டு அமைப்புக்களிலும் மேலானது எது? இரண்டையும் ஒத்து நோக்குவோம். ஒரு விதமான நிலைமைகளுக்குள் சோஷலிசத்துக்கும் முதலாளித்துவத்துக்குமிடையே ஒரு சமமான போட்டி நடைபெறுவதாக கற்பனை செய்வோம்.

சு: எப்படியான ஒத்து நோக்கல்களைத் தாங்கள் கருதுகிறீர்கள்?

சீ: அமெரிக்கா அல்லது வேறு ஒரு முதலாளித்துவ நாடு தன்னுடைய பொருளாதாரக் கதவுகளை பூட்டிவிட்டதென்றோ அல்லது ஒரு 10 அல்லது 20 வருடங்களுக்கு பொருளாதார ரீதியாகவும் தொழில்நுட்ப ரீதியாகவும் முற்றுகையிடப்பட்டிருக்கிறது என்று வைத்துச் சொல்வோம். இந்த நாட்டினுடைய திறந்த பொருளாதார அமைப்பு (சட்டில்லா சந்தை முறை) இந்த 10 தொடக்கம் 20 வருடங்களுக்கு நின்று பிடிக்குமா? அத்துடன் உயர்ந்த வாழ்க்கைத்தரத்தையும் பேணிக் காக்க முடியுமா? ஒரு முற்றுகையின் கீழ் இந்த இரு அமைப்புக்களுள்ளும் எந்த அமைப்பு பலவித சிக்கலான சமூகப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும்?

மேற்கூறப்பட்ட போட்டியில் எந்த ஒரு மேற்கு நாடாவது நின்று பிடிக்கும் என நான் நம்பவில்லை.

சு: நிச்சயமாக எங்களுடையது எப்போதுமே திறந்த பொருளாதாரமே.

8) ஏன் மேற்கு நாடுகள் சோஷலிசத்துக்கு எதிராகத் தடைகள் (முற்றுகைகள்) போடுகின்றன?

சீ: ஆம். அதுதான் விசயம்.

உண்மை என்னவென்றால் உங்களுடைய பொருளாதாரம் எப்பொழுதும் உலகச் சந்தையில் தான் தங்கி வந்து கொண்டிருக்கிறது. இந்தச் சந்தையில் வளர்ச்சியடைந்த நாடுகளினதும் பிற்படுத்தப்பட்ட நாடுகளினதும் அபிவிருத்தி வாய்ப்புக்களுக்கிடையில் ஏற்றத் தாழ்வுகள் இருக்கின்றன. தொழில்துறை, தொழில்நுட்பம் ஆகியவற்றில் வளர்ச்சியடைந்த நாடுகள் ஆணையிடுகின்ற அல்லது அதிகாரம் பண்ணுகின்ற நிலைமையைக் கொண்டுள்ளன.

இன்னும் கடந்த தசாப்தங்களில் மேற்கு நாடுகள் சோஷலிசத்திற்கு எதிரான தடைகள் ஏற்படுத்தியதுடன் அரசியல் பொருளாதாரம் இராணுவம் ஆகியவற்றின் மூலம் தங்களுடைய கட்டுப்பாட்டில் இருக்கும் உலகச் சந்தையிலிருந்து சோஷலிச நாடுகளை ஒதுக்கியும் வைத்துள்ளன.

படிப்பகம்

www.padippakam.com

மேற்குலகின் தலைவர்கள் சீனாவை ஒரு சிக்கன வாழ்வு வாழ்வதற்கு நிர்ப்பந்தித்தனர். 1950 க்கும் 1970 க்கும் இடையில் வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் சர்வதேச தொழில் பிரிவு மூலமும் கலாநிதி டேவிட் றிக்கார்டோவினால் வருவிக்கப்பட்ட "தரமான பொருளாதார லாபங்களை" சம்பாதித்துக் கொள்வது சீனாவுக்கு மிகவும் கடினமாக இருந்தது. கடந்த 30 ஆண்டுகளில் சீனா தன்னுடைய தொழில்துறை விஞ்ஞானம் தொழில்நுட்பம் ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதற்கும் தன்னை நவீனமயமாக்கி முன்னேற்றமடைந்த நாடுகளின் தரத்தை எட்டிப் பிடிக்கவும் தேவையான நிதிகளைப் பெறுவதற்கு தன்னுடைய உள்நாட்டு சந்தையிலே தங்கியிருக்க வேண்டி இருந்தது. எனினும் மேற்கு நாடுகள் எப்போதும் சீனாவினுடைய பொருளாதாரத்தை ஒரு "பற்றாக்குறைப் பொருளாதாரம்" எனவும், எனது நாட்டின் பொருளாதாரக் கஷ்டங்கள் சோஷலிச அமைப்பின் விளைவே எனவும் எள்ளி நகையாடி வருகின்றன. இது மிகவும் நியாயமற்றதாகும். உண்மையில் மேற்கு நாடுகளினால் முன் வைக்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டிய கடமை சீனாவுக்கும் சோஷலிச பாதையை தேர்ந்தெடுத்துள்ள எல்லா நாடுகளுக்கும் உண்டு.

"சோஷலிசத்தைக் கைவிட்டால் (தான்) மாத்திரமே நாங்கள் உங்களை எமது கட்டுப்பாட்டில் இருக்கும் உலகச் சந்தைக்குள் அனுமதிப்பதுடன் சர்வதேசப் பொருளாதார அமைப்புக்களின் அங்கத்துவம் தந்தும் உங்கள் நாட்டுக்கு விசேட அந்தஸ்தும் வழங்குவோம்" என மேற்கு நாடுகள் சொல்கின்றன. அபிவிருத்தி அடையாத நாடுகள் சோஷலிச முறையைக் கைவிட்டால் அவை தங்களுடைய அரசியல் பொருளாதார சுதந்திரத்தை இழப்பதுடன் வெகு சுலபமாக அபிவிருத்தி அடைந்த நாடுகளினால் ஆட்டிப்படைக்கப்படுவர். இந்த நிலைமை நாம் ஏற்கனவே சில கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் கண்டிருக்கிறோம். முடிவில் என்ன நடக்கும் என்றால் பல அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் தங்கி இருக்கும் ஒரு பொருளாதாரப் பிரதேசமாக மாறிவிடுவதுடன் நவீன உலக பொருளாதாரத்தின் கடன் பளுவிற்கு அடிமை ஆகவும் ஆக்கப்படுவர். அந்த நாடுகள் சோஷலிசத்தைக் கைவிட மறுத்தால் மேற்கு நாடுகள் அவற்றிற்கெதிரான பொருளாதார, அரசியல், கலாச்சார, தத்துவார்த்த ரீதிகளில் முட்டுக்கட்டைகளைப் போடுவார்கள் அல்லது அவற்றை இல்லாதொழிப்பதற்காக உள்நாட்டுக் குழப்பங்களை உருவாக்குவார்கள்.

ஒன்று இரண்டு தசாப்தங்களுக்கு முன் சோவியத் யூனியன் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் தொழில்துறையில் மிகவும் முன்னேறிய நாடுகளாக வளர்ந்து கொண்டு வந்தன. ஆனால் இன்று அவற்றுள் சில நாடுகளின் பொருளாதாரம் சரிவடைந்து கொண்டு வருவதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

உண்மையில் பொருளாதாரம் தொழில்வளம் விஞ்ஞானம் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் சர்வதேச ரீதியில் தீவிர போட்டியில் ஆழ்த்துவதன் மூலம் இந்நாடுகளை அவற்றின் தத்துவார்த்த, பொருளாதார, அரசியல் கோட்பாடுகளில் இருந்து விலக்கி வைத்துள்ளன.

www.padippakam.com

மேற்கு நாடுகள் தங்களால் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும் உலகச் சந்தையின் சோஷலிசப் பொருளாதாரத்தை விலக்கி வைத்து தனிமைப்படுத்துவதன் மூலம் சோஷலிசத்தைப் முறியடிக்கப் பார்க்கின்றன. இது உண்மையான பனிப் போர் ஆகும்.

சுருக்கமாகக் கூறப் போனால் அபிவிருத்தி அடைந்த நாடுகள் எந்த வகையில் என்றாலும் தங்களுடைய செல்வத்தையும் உயர்ந்த நிலைமையையும் பாதுகாக்கவும் ஸ்திரப்படுத்தவும் முயல்வர். அபிவிருத்தி அடையாத நாடுகள் அபிவிருத்தி அடைவதையும் முன்னேறுவதையும் பார்க்க அவர்களுக்குச் சகிப்பதில்லை. இது தற்போதைய போட்டாபோட்டி உலகில் பச்சை உண்மையாகும்.

9) சோஷலிசத்தின் சாதகமான தன்மைகள்

---

க: ஒரு தூய பொருளாதார முறையில் நோக்கும் போது சோஷலிச அமைப்பில் குறைபாடுகள் இல்லை எனத் தாங்கள் நம்புகிறீர்களா?

தீ: நிச்சயமாக குறைபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. குறைபாடுகள் இல்லாவிட்டால் நாம் ஏன் சீர்திருத்தங்களைச் செய்கின்றோம். ஒவ்வொரு விடயத்திலும் சாதகமான தன்மைகளும் பாதகமான தன்மைகளும் இருக்கத்தான் செய்கின்றன. சோஷலிசத்தைப் பொறுத்த வரையில் அதில் இருக்கின்ற குறைபாடுகளைப் பார்ப்பதற்கு முன் அதில் உள்ள சாதகமான நிலைமைகளைப் பார்க்க வேண்டும்.

க: சாதகமான நிலைமைகளா?

தீ: சோஷலிசத்தில் உள்ள சாதகமான தன்மைகள் என்னவென்றால் அது மாபெரும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான சமூக வளங்களை மையப்படுத்தலே ஆகும், என டெங் சியாவோ பிங் கூறினார். அவரின் கூற்று மிகவும் கருத்தாழமிக்கதொன்றாகும்.

அவர் குறிப்பிட்ட வளங்களாவன : முதலாவதாக மனித சக்தி. இரண்டாவதாக மூலப் பொருள் வளம், சமூகத்திடைய மிக அத்தியாவசியமான தேவைகளைச் சமாளிப்பதற்கு தேவையான மூலவளங்களை ஒருமுகப்படுத்துவதற்கான (மையப்படுத்துவதற்கான) அதிகாரத்தைப் பொதுத்துறை உடமை( ) வழங்குகின்றது. சீனாவின் 41 வருடகால முன்னேற்றம் சிறந்த பொருளாதாரத்தைப் பின்பற்றும் சில அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளிலும் பார்க்க சாத்தியமாக இருப்பதன் காரணம் இதுவே.

க: ?...........

தீ: சோஷலிசத்தின் மற்றச் சாதகமான தன்மை அதன் வெளியுறவு அலுவல்களில் உள்ள பலத்தில் தங்கியுள்ளது. இந்த அமைப்பு நாட்டின் மனித வளம் ஆகியவற்றை ஒரு நெருக்கமாகப் பின்னப்பட்ட ஒரு குழுவாக

படிப்பகம்

www.padippakam.com

இழைக்கின்றது. இது தேசிய அரசியல் ரீதியாக வெளிநாட்டுப் பூச்சாண்டிகளை எல்லாம் எதிர்த்து நிற்பதோடு தேசிய நலன்களைப் பாதுகாத்து நிற்கின்றது. பொருளாதார ரீதியாக இது தேசிய சக்தியை ஒருமுகப் படுத்தி தேசிய பொருளாதாரத்தைப் பாதுகாத்து நிற்கின்றது. இவ்வாறு உலகப் பொருளாதாரத்தில் சர்வதேச முதலாளித்துவத்தின் ஏகபோக உரிமையை எதிர்த்து நிற்கக் கூடிய பலத்தை நாட்டு மக்களுக்கு வழங்குகிறது. இந்த சோஷலிசத் தீர்வை அழிப்பதற்கு அந்தச் சோஷலிச நாடுகளில் இக்கும் மக்களைத் தூண்டிவிடும் போக்கு அபிவிருத்தி அடைந்த நாடுகளில் காணக் கூடியதாக இருக்கின்றது. அவர்களுடைய செயற்பாடுகளின் பின்னணியில் இருப்பது இந்த நோக்கமே. இதில்லாமல் அவர்கள் எங்கள் மேலோ அல்லது எங்கள் சமூகத்தின் அரசியல் பொருளாதார அபிவிருத்தியின் மேலோ அக்கறையோ விருப்போ கொண்டிருக்கிறார்கள் என்பது அர்த்தமல்ல. இதை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?

கு: மதிப்பீடு பற்றிய கேள்வியும் இருக்கிறதே.

கீ: சுய மதிப்பீடுகள் பற்றிய சொல்கையா? ( ) அவர்கள் உண்மையான இலாபம் பற்றி அக்கறை இல்லாதவர்களாக இருந்தால் ஒவ்வொரு சுதந்திரமும் கைக்குப் பார்க்கும் இந்த மேற்கு நாடுகள் சோஷலிச நாடுகளில் இருக்கும் "ஜனநாயக அமைப்புக்களில்" வெகு தாராளமாக முதலீடு செய்வார்கள் என்று நான் நினைக்கவில்லை.

சோஷலிசம் முதல் முறையாக 20 ம் நூற்றாண்டில் பொருளாதார ரீதியாக வளர்ச்சி அடையாத ஐரோப்பிய ஆசிய நாடுகளில் தான் தோன்றியது. தற்போது இந்த நாடுகளில் சோஷலிசம் வெகு வேளைக்கே அறிமுகப்படுத்தப்பட்டு விட்டது என்றும் அதன் மூலம் ஐதார்த்த நிலைக்குப் பதிலாக கற்பனையான ஒன்றைப் படைத்து விட்டார்கள் என்றும் கூறுகிறார்கள். முந்திய முதலாளித்துவ அமைப்பில் இருந்து தொழில் மயப்படுத்தப்பட்ட அமைப்புக்கு விரைந்து மாற்றப்பட்டுக் கொண்டிருக்கும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு இந்தப் பொருளாதார அமைப்பே (சோஷலிச அமைப்பே) மிகவும் பொருத்தமானது என்பதை இவர்கள் உணர்கிறார்கள் இல்லை. (ஒரு வழியில் ஜப்பான் பொருளாதார அபிவிருத்தி இதை நிரூபிக்கவில்லையா?)

1950 களின் முற்பகுதியில் தொழில் மயப்படுத்தல் தொடங்கிய பொழுது சீனாவிடம் அதற்குத் தேவையான மூலதனமோ தொழில்நுட்பமோ இருக்கவில்லை. மேலும் சிக்கலான சமூகம் பிரச்சினைகளுக்கும் முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்ட கால கட்டம் அது. அப்படியான சந்தர்ப்பத்திலும் சீனா அரச பொதுத்துறை உடமையின் பலத்தில் தங்கியிருந்து தன்னுடைய மட்டுப்படுத்தப்பட்ட வளங்களை ஒருமுகப்படுத்தி குறிப்பிடத்தக்க அபிவிருத்தியை எட்டியது. இது ஒரு சிட்டிய (சுதேசிய) வழி என்பதை வரலாறு நிரூபித்திருக்கிறது. இந்த உண்மை உலகளாவிய விதத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இது சீன மக்களுக்கு ஒரு பெருமை தரக்கூடிய விடயமாகும். எனினும் இந்த உண்மை சமீப காலமாக மறைக்கப்பட்டுவிட்டது போல் தெரிகிறது.

படிப்பகம்

www.padippakam.com

தற்போது சிலர் சீனாவை குறை கூறுகின்றனர். சீனா 40 வருடகாலமாக சோஷலிச அமைப்பில் இருந்து வந்திருப்பினும் கூட அதனுடைய பொருளாதார பலாபலன்களும் வாழ்க்கைத் தரமும் அமெரிக்காவினதும் மற்றும் அபிவிருத்தி அடைந்த முதலாளித்துவ நாடுகளின் தரத்துடனும் சமதையானவை அல்ல என சொல்லுகிறார்கள்.

இந்தக் கோமாளித்தனமான பேச்சுக்குப் பதிலாக 40 வருடங்களுக்கு முன் சீனாவின் பொருளாதார அரசியல் சமூக நிலைமைகள் எந்த நிலையில் இருந்தன என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும். அப்போது சீனா மிகவும் அபிவிருத்தி அடையாத நாடுகளில் ஒன்றாக இருந்தது. இன்று அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கும் சீனாவிற்கும் இடையிலான இடைவெளி என்ன? இந்த இடைவெளி கூடி இருக்கிறதா அல்லது குறைந்திருக்கிறதா? மேலும் எத்தகைய வெளிநாட்டு சூழ்நிலைகளில் சீனா இந்த இடைவெளியை மிகவும் குறுகியதாக்கியது. 40 வருடங்களுக்கு முன் சீனாவைப் போலவே பொருளாதாரத்தைக் கொண்டிருந்த எந்த நாடு பொருளாதாரத்திலும் சரி சர்வ தேசிய அந்தஸ்திலும் சரி சீனாவை விட முன்னணியில் நிற்கிறது?

சு: ஆசியாவின் நான்கு சிறிய டிரகன்களைப் பற்றி என்ன சொல்லுகிறீர்கள்?

சீ: இந்த நான்கு டிரகன்களைப் பற்றிய உண்மைகளைக் கூறுகிறேன். முதலாவது 1970 களிலும் 1980 களிலும் இங்கெல்லாம் ஏற்பட்ட அதிவேகப் பொருளாதார வளர்ச்சிக்கு அங்கு ஏற்பட்ட விசேட சூழ்நிலைகளே காரணமாகும். இந்த விசேட சூழ்நிலைகள் இல்லாமல் போகுமானால் இந்த நாடுகள் தங்களுடைய குறிப்பிடத்தக்க வளர்ச்சி விகிதத்தைத் தப்பவைத்துக் கொள்ள முடியாது. இதை நீங்கள் நம்பாவிடில் அடுத்த 10 வருடங்களில் அவர்களுடைய அபிவிருத்தியைக் கவனித்துப் பாருங்கள்.

சு: விசேட சூழ்நிலைகள் என நீங்கள் எவற்றைக் கருதுகிறீர்கள்?

சீ: இந்த விசேட சூழ்நிலைகள் கிழக்கில் புதிய சீனா உருவெடுத்ததும் 1950 களில் அமெரிக்காவினால் சீனாவுக்கு எதிராக நடைமுறைப்படுத்தப்பட்ட பொருளாதார முற்றுகை ஆகியவற்றுடன் தொடர்பு உள்ளவையாக இருக்கின்றன. இந்த 4 டிரகன்களில் ஒவ்வொன்றும் அமெரிக்காவின் முதலீடு உதவி தொழில்நுட்பம் ஆகியவற்றில் தங்கியிருந்தே வளர்ச்சியடைந்தன. புதிய சீனா என்ற ஒன்று இல்லாமல் இருந்தால் அமெரிக்கா அப்படியான உதவிகளை அவைகளுக்கு வழங்கி இருக்காது. (இதுஆசியாவில் 4 டிரகன்களும் வளர்ச்சி அடைந்ததற்கு ஒரு காரணம் மட்டுமேயன்றி உலகின் மற்றப் பகுதிகளில் அல்ல.) இந்த வரலாற்று சந்தர்ப்பத்தைக் கை நழுவ விட்டுவிடாமல் இறுகப் பிடித்துக் கொண்டு அதைத் தங்களுக்கு சாதகமாகப் பாவித்துக் கொண்டதுமே அவர்களுடைய (4 டிரகன்கள்) கெட்டித்தனமாகும்.

இரண்டாவதாக, இன்றும் கூட அவர்களுடைய பலம், தொழில்நுட்பம் பொருளாதாரம் ஆகியவை சீனாவினுடையதற்கு மேம்பாடானவையல்ல. அவர்கள் தங்களுடைய மொத்த தேசிய உற்பத்தி விகிதத்தைப் பற்றி மட்டும் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். இந்த விகிதம் குறிப்பிடக்

படிப்பகம்

www.padippakam.com

கூடியதாக இருந்தாலும், பயப்படக் கூடியதல்ல. அளவிற்கு அவ்வளவு பெரிதல்ல. அதிர்ஷ்டவசமாக, பல அபிவிருத்தி குறைந்த நாடுகள் பெரிய கடன்களைக் கொண்டிருந்தும் அவர்களுடைய பொருளாதாரம் நாசமுறும் நிலையில் இருந்தும் கூட அவர்களுடைய மொத்த தேசிய உற்பத்தி விகிதம் சீனாவினுடையதில் பார்க்கக் கூடுதலாக இருக்கிறது.

மூன்றாவதாக, இந்தப் பொருளாதாரப் போட்டி இன்னும் முடிவடைந்து விடவில்லை. இன்னும் 10 வருடத்தில் சீனாவில் சமூகக் குழப்பங்கள் ஏதும் ஏற்படாமலும் அதன் பாரிய பொருளாதார அபிவிருத்திக் கொள்கைகள் சரியானதாகவும் இருந்தால் ஆசியாவின் பொருளாதார ரீதியான வரைபடம் எப்படி இருக்கும் எனச் சொல்வது கடினமாக இருக்கும்.

10) கெட்டதை இல்லாமல் செய்து நல்லதை
ஊக்குவிப்பதே சீர்திருத்தத்தின் நோக்கம்

---

சு: (சிரித்து) நீங்கள் உண்மையிலேயே கூர்மதி படைத்தவர்தான். ஆனால் சோஷலிச அமைப்பிலுள்ள பாதகமானவற்றைச் சொல்லுங்கள்.

லீ: (சிரித்து) சில வேளைகளில், லெனின் சொல்வது போல் சாதகமானவை முறையற்ற விதத்தில் விஸ்தரிக்கப்படும் போது அவை பாதகமானவை ஆகி விடக் கூடும்.

சோஷலிசத்தின் தகுதி அதி உயர்ந்த மையப்படுத்தலில் தங்கியுள்ளது. இதை மாவோ, "மன வலிமை; நடவடிக்கை ஆகியவற்றின் கூட்டு" எனச் சொன்னார். சோஷலிசத்தின் பாதகமான தன்மை முதலாவதாக அரச ஆதிபத்தியத்தின் கண்மூடித்தனமான வளர்ச்சியும் அதன் காரணமாக ஒவ்வொன்றின் மேலும் கண்டிப்பான கட்டுப்பாடு இருத்தலுமே ஆகும். நான் இதை "கலாச்சாரப் புரட்சி"யின் போது அனுபவித்துள்ளேன்.

இதற்கிடையில் அதிகாரிகளின் கைகளில் தரப்பட்ட அதிகாரம் ஒரு அதிகார வர்க்கத்தை சுலபமாக உருவாக்கக் கூடிய ஆபத்தை ஏற்படுத்துவதுடன் ஆகக் கூடிய சலுகைகள் இலஞ்சம் சீரழிவு இப்படியான பிரச்சினைகளையும் உருவாக்கக் கூடும். ஆனால் இது சோஷலிச அமைப்பில் மாத்திரம் நிகழக்கூடிய ஒரு நிகழ்வு அல்ல. இது ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகளின் அரசியல் வாழ்க்கையிலும் ஏற்படுகிறது. அரசியல் அவலங்களும் இவற்றுள் அடங்கும்.

இரண்டாவதாக மையப்படுத்தலையும் ஒன்று சேர்த்தலையும் தேவைக்கதிகமாக நடைமுறைப்படுத்தப்படும் போது தீர்மானங்கள் எடுக்கும் உயர் அமைப்பில் ஏற்படும் தவறுகள் சமூகம் முழுவதின் மேலும் தாக்கத்தை ஏற்படுத்தும். இது 1953 இலும் (பாரிய முன்னேற்றப் பாய்ச்சல்) 1966 இலும் (கலாச்சாரப் புரட்சி) ஏற்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com

மூன்றாவதாக, சாதாரண மக்களின் விருப்பம் முறையில்லாத வகையில் வலியுறுத்தப்படும் சமயங்களில் தனிப்பட்டவர்களையும் (குறிப்பாக புத்தி ஜீவிகள்) தனி மனிதனின் ஆக்கபூர்வ அபிவிருத்தித் தன்மையையும் ஒடுக்க வேண்டி வரும். உண்மையில் மாவோ இதைக் கவனத்தில் கொண்டு ஜனநாயகம் மையப்படுத்தல் ஆகிய இரண்டினதும் தேவையை அடிக்கடி வலியுறுத்தி வந்தார். எண்ணங்கள் அல்லது விருப்பங்கள் மக்கள் நிம்மதியாக இருக்கக் கூடிய சூழ்நிலையுடன் இணைந்ததாக இருக்க வேண்டுமென அவர் வலியுறுத்தினார். ஆனால் துரதிஸ்டவசமாக அவருடைய காலத்தில் ஏற்பட்ட கூர்மையான போராட்டத்தினாலும் (போட்டியினாலும்) பல வரலாற்றுக் கட்டுப்பாடுகளினாலும் அவருடைய கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டு அதன் உண்மையான தத்துவத்தின்படி நடைமுறைப்படுத்தப்பட இயலாமல் போய்விட்டது.

வளம்பெற்ற வளமற்ற பகுதிகளுக்கிடையில் பணம் பொருள் ஆகியவற்றை ஒதுக்கீடு செய்தல், அறுவடை கூடிய பகுதி, பயிரழிவு நடைபெற்ற பகுதி ஆகியவற்றிற்கிடையில் தானியங்களைப் பங்கீடு செய்தல் ஆகியவை சோஷலிசத்தின் தகுதிகளாகும். இவற்றையெல்லாம் அரச கட்டுப்பாடு சட்டம் ஆகியவற்றின் மூலமே நடைமுறைப்படுத்தப்படலாம். சமூக உற்பத்திகளின் பங்கீடு, பணக்காரன் ஏழை ஆகியோரிடையிலான வித்தியாசம் ஆகியவற்றைப் பொறுத்தளவில் சோஷலிசம் முதலாளித்துவத்தை விட மிகவும் நீதியானதும் நியாயமானதுமாகும்.

ஆனால் இது சில குறைபாடுகளையும் ஏற்படுத்துகிறது. இது மிகவும் நீதியானதும் நியாயமானதுமாக இருக்கும் போது சமத்தன்மை ஏற்படுகின்றது. சுயவிருப்பத்தின் பேரில் மக்களைப் பங்குபற்ற வைப்பதற்கு இந்த சமத்தன்மை உதவியாக அமைய மாட்டாது. இத்துடன் வேறு பிரச்சினைகளும் உண்டு. ஆனால் முழுமையாகப் பார்க்குமிடத்து பொருளாதார ரீதியின் பிற்படுத்தப்பட்ட நாடுகளைப் பொறுத்த அளவில் சோஷலிசத்தினால் ஏற்படும் பாதகங்களைப் பார்க்க சாதகங்களே கூடுதலாக உள்ளது. உலக சரித்திரக் கண்ணோட்டத்தில் பார்க்கும் போது கடந்த 40 வருடங்களாக சீன மக்களின் விவேகத்தையும் உற்பத்தித் திறனையும் கொண்ட சீனாவின் சோஷலிசம் ஒரு வெற்றிகரமான உதாரணமே.

நான் அறிந்த வரையில் திரு. டெங்சியாவோ பிங்கினால் தொடக்கப்பட்ட சீர்திருத்தம் சோஷலிச அமைப்பில் உள்ள பாதகமான தன்மைகளை ஒழித்துச் சாதகமான தன்மைகளை ஊக்குவிப்பதாகவே உள்ளது.

படிப்பகம்

www.padippakam.com

## 11) பத்து வருட சீர்திருத்தத்தில் நட்டங்களைப் பார்க்க இலாபங்களே அதிகம்

கே: நீங்கள் அரைப் பழமைவாதிகள் என வெளி உலகத்தினர் கூறுவதைப் பற்றி உங்கள் கருத்தென்ன?

ப: நான் ஒரு பழமைவாதியல்ல. டெங்கின்டைய சோசலிச சீர்திருத்தக் கொள்கையை நான் முற்றுமுழுதாக ஆதரிக்கிறேன். சீர்திருத்தத்தைப் பொறுத்த வரையில், மேற்கு நாடுகளை நோக்கி ஓடியவர்களிடமிருந்து நான் வேறுபட்டு நிற்கிறேன். அவ்வளவுதான்.

கே: அப்படி ஓடியவர்களெல்லோரும் தங்களுடைய நண்பர்கள் தானே. உதாரணமாக லியூ செங் வு.

ப: அவர் என்னு தலைவராகவும் கல்வித் தோழராகவும் இருந்தார். ஆனால் தனிப்பட்ட நட்பு வேறு. அரசியல் வேறு. 1985 லிருந்து லியூ (மற்ற வர்களும்) வும் நானும் சில முக்கிய பிரச்சினைகள் பற்றி வேறுபட்ட கருத்துக்களைச் சொல்லியிருந்தோம். (சீன இயக்கத்தின் நவீன பாட சாலை உட்பட) கல்வித்துறையில் உள்ள பலர் இதுபற்றி அறிவார்கள்.

கே: கடந்த 10 ஆண்டுகளில் சீனாவின் சீர்திருத்தம் பற்றி எவ்வாறு மதிப்பீடு செய்கின்றீர்கள்?

ப: சீர்திருத்தம் ஆரம்பிக்கப்பட்ட 1979 லிருந்து எட்டப்பட்ட மிகவும் பிரதானமான விடயம் என்னவென்றால் சோசலிச அமைப்பினுள் புகுத்தப் பட்ட மாபெரும் சக்தியும் உயிரோட்டமுமேயாகும். இதைப்பற்றி அறி வதில் ஈடுபட்டவர்கள் இப்படியான மாற்றங்களை பாரபட்சமற்ற முறையில் பகுத்து ஆராய்தல் வேண்டும். என்னைப் பொறுத்தவரை கடந்த 10 ஆண்டுகளில் சீர்திருத்தம் நட்டத்திலும் பார்க்க கூடுதலான இலாபத்தையே தந்திருக்கிறது.

மாசேதுங் ஒரு முறை சோவியத் யூனியனின் சோசலிசத்தைப் பற்றி விமர்சித்தது எனக்கு ஞாபகத்தில் இருக்கிறது. ஒரு சோசலிச சமுதா யத்தில் நிலவிய முரண்பாடுகளையும் பின்னடைவுகளையும் யதார்த்த பூர்வ மாக ஏற்றுக் கொள்ள மறுத்ததனாலும் சமுதாயப் பிரச்சினைகளுக்கு நியாய பூர்வமான முறையில் முகங்கொடுக்க மறுத்ததனாலும் சோவியத் மக்கள் முன்னேற்றத்தை அடைய முடியாமல் போய் விட்டது என கூறி யிருந்தார். மாவோ வின் கூற்று மிகவும் கூர்மையானதொன்றாகும்.

மறுபுறத்தில் சீனாவின் 10 வருடகால (1979-89) சீர்திருத்தம் சீன சோசலிச அமைப்பில் இருந்த முரண்பாடுகள் பின்னடைவுகள் குறைபாடு கள் ஆகியவற்றைத் தெளிவாக எடுத்துக் காட்டியது. 10 வருட சீர் திருத்தம் நாட்டின் பொருளாதாரம், அரசியல் தத்துவார்த்தம், கலாசாரம், சமூக வாழ்க்கை ஆகியவற்றிலிருந்த முரண்பாடுகளைத் தெளிவாக வெளிச் கொணர்ந்தது எனச் சொல்லலாம்.

www.padippakam.com

ஆனால் அதே சமயத்தில் 40 வருட காலமாக சீனாவில் ஏற்பட்ட பாரிய நிர்மாணங்களையும் சீனாவின் 5000 ஆண்டுகள் பழைமை வாய்ந்த தேசிய தாற்பரியத்தையும் கலாச்சார பாரம்பரியத்தையும் நிராகரிக்கும் ஒரு மனப்பான்மையும் வளர்ந்தது. இது சீர்திருத்தத்தின் ஒரு எதிர்மறை விளைவாகும்.

12) முழு உலகத்திலும் சோஷலிசத்துக்கான வாய்ப்புகள்

கே: தற்போது உலகத்தின் நிலமை என்ன? உலகளாவிய விதத்தில் சோஷலிச நாடுகளின் எண்ணிக்கை குறைந்துகொண்டு வருகிறதல்லவா?

சீ: அரச கட்டுப்பாட்டுப் பொருளாதாரமா அல்லது திறந்த பொருளாதாரமா மேலானது என்ற விவாதம் நீண்டகாலமாகவே நடைபெற்று வருவதைப் பொருளாதார நிபுணர் என்ற வகையில் தாங்கள் உணர்வீர்கள் என எண்ணுகிறேன். குறிப்பாக 19ம் நூற்றாண்டில் புகழ்பெற்ற ஜேர்மனிய பொருளாதார நிபுணரும் ஜேர்மனியின் தொழில்மயப்படுத்தும் கொள்கையின் தந்தையுமாகிய பிறெட்றிக் லிஸ்ட் அவர்கள் அடம் சிமித் அவர்களின் திறந்த பொருளாதாரத்தைக் குறை கூறியது எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது.

உலகச் சந்தையில் தொழில் வளத்தில் பிற்படுத்தப்பட்ட நாடுகளின் தற்பாதுகாப்புத் திறனை உடைத்தெறிவதற்கும் அந்த நாடுகளின் உரிமைகளை அழித்தொழிக்கவும் பெரிய பொருளாதார் சக்திகள் சுதந்திர வர்த்தகத்தையும் கட்டில்லாச் சந்தை அமைப்பையும் ஒரு கருவியாக கொண்டிருக்கின்றன என லிஸ்ட் அவர்கள் கூறினார்கள். பிற்படுத்தப்பட்ட நாடுகள் தங்களுடைய முற்றாக வளர்ச்சியடையாத தொழில்வளத்தையும் தேசிய சந்தையையும் பாதுகாப்பதற்கு அரச தலையீட்டிலேயே தங்கியிருக்க வேண்டியிருக்கும். இல்லாவிடில் அவை பலம் வாய்ந்த பொருளாதார சக்திகளினால் பொருளாதார ரீதியில் சீரழிக்கப்படும்.

தொழில்வள ரீதியில் வளர்ச்சி குன்றிய நாடுகளின் தேசிய பொருளாதாரத்தை பாதுகாக்கக் கூடிய முதன்மை வாய்ந்த ஒரே ஒரு சமூக அமைப்பு சோஷலிச அமைப்பேயாகும். அதன் காரணமாகவே சோஷலிசம் என்பது 20 நூற்றாண்டில் ஒரு சாதாரண நிகழ்வு என்றில்லாமல் பெரும்பான்மையான வளர்ச்சி அடையும் நாடுகள் சுதந்திரமடைந்த பின்னர் பொருளாதார் ரீதியிலும் பின்பற்றுகின்ற ஒரு மாபெரும் வரலாற்றுப் புகழ் வாய்ந்த நடைமுறையாக நாம் காணக் கூடியதாக இருக்கின்றது. கிழக்கு ஐரோப்பாவில் ஏற்பட்ட நிகழ்வுகளினால் இந்த நடைமுறை அல்லது போக்கு ஒரு முடிவுக்கு வந்துவிடவில்லை. அல்லது கிழக்கு ஐரோப்பாவில் கூட வரலாற்று முன்னேற்றம் ஒரு முடிவுக்கு வந்து விடவில்லை.

www.padippakam.com

சமீபத்தில் ஒரு அமெரிக்கரினால் எழுதப்பட்ட 'வரலாற்று முடிவு' என்ற ஒரு கட்டுரையை வாசித்தேன். கிழக்கு ஐரோப்பாவில் ஏற்பட்டுவரும் நிகழ்வுகள் மனித சமுதாய முன்னேற்றம் முதலாளித்துவ சமுதாயத்தில் வந்து முடிவடையும் என்றும் அந்த இடத்திலிருந்து அரசியல் மட்டுமே இருக்குமென்றும் உலகச் சரித்திரம் இருக்காதென்றும் அந்தக் கட்டுரை எழுதியவர் குறிப்பிட்டிருந்தார். இதைவிட கர்வம் மிகுந்ததும் முட்டாள்தனமானதுமான கொள்கையை நான் வாசிக்கவில்லை.

மேற்கு நாடுகளில் உள்ள சிலர் சோஷலிசம் உலகளாவிய ரீதியில் ஒரு ஈடுசெய்ய முடியாத இழப்பை அடைந்துவிட்டதாக நம்புகிறார்கள். இத் தீர்மானம் ஒரு முதிர்ச்சி அடையாத தீர்மானம் என நான் எண்ணுகிறேன்.

கு: ஏன்?

13) நீதிக்கு ஒரு பாதை

சமீபகாலமாக இந்தக் கேள்வியைப் பற்றி நான் மீண்டும் மீண்டும் சிந்தித்திருக்கிறேன். ஒரு உலகக் கண்ணோட்டத்தில் மனித சமுதாய அபிவிருத்தியை எதிர்கொள்ளும் பிரச்சினைகள் முன்பு எப்போதும் இல்லாதவாறு மிகவும் கூர்மை அடைந்ததும் மிகவும் சிக்கலானதுமாக இருப்பதை நாம் அறிவோம். அதே சமயம் உலகப் பொருளாதாரமும் அரசியலும் இணைவதான போக்கு முன்னெப்போதுமில்லாத அளவு முக்கியத்துவம் அடைகின்றது.

தற்போது உலகப் பிரச்சினைகளில் மிகவும் பயங்கரமாக இருப்பவை இயற்கை வளங்கள் அருகிப் போதல், சுற்றாடல் மாசுபடுதல், உணவுப் பற்றாக்குறை, சந்தைப் பெருக்கம் ஆகியவையாகும். இதில் கேள்வி என்னவென்றால் இந்தப் பிரச்சினைகளை எல்லாம், மேலும் உலக வளங்களை தனியார்மயப்படுத்துதலாலும் அரச குறுக்கீடு இல்லாத (கட்டுப்பாடில்லாத) உலகப் பொருளாதாரத்தின் மூலம் தீர்க்க முடியுமா என்பதுதான். அல்லது ஒரு ஏகாதிபத்திய அமைப்பின் கீழ் உலகத்தை ஒன்று இரண்டு அல்லது மூன்று வல்லரசுகள் ஆட்சி செய்வதன் மூலம் இப்பிரச்சினைகள் தீர்க்கப்பட முடியுமா? (இத்தீர்வினால் ஆகக் கூடியளவு அபிவிருத்தி அடைந்த நாடுகளில் ஒரு சிறு தொகையினர் மட்டுமே பிரயோசனம் அடையக் கூடியதாக இருக்கும்) அல்லது உலகப் பொருளாதாரத்தின் பொருட்டு முழுமையான சட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்ட திட்டங்கள் ஆகியவற்றின் மூலம் இந்தப் பூமியிலுள்ள வளங்கள் தொழில் செல்வம் ஆகியவற்றை முழு மனித இனத்துக்குமே உரியதாக்கப்படும்பொழுது இந்தப் பிரச்சினைகள் அடிப்படையில் தீர்க்கப்படுமா?

இதற்குரிய பதில் மேற்கொண்டும் விளக்கங்கள் தேவைப்படாமல் விளக்கமாக இருக்கிறது என நான் எண்ணுகிறேன். மற்றப்படி இந்த உலகத்தில் சமாதானமும் ஸ்திரத்தன்மையும் ஒரு போதும் நிலவ மாட்டாது என்பதுடன் இவ்வுலகில் யுத்தங்கள், பிரச்சினைகள் குழப்பங்கள் திரும்பத்திரும்ப ஏற்பட்டுக் கொண்டே இருக்கும்.

படிப்பகம்

www.padippakam.com

மனித சமுதாயத்தையே அழித்தொழிக்கக் கூடிய பிரச்சினைகள் தினந்தினம் கூடிக்கொண்டே வருகின்ற பொழுது முழு மனித இனமுமே புயனடையக் கூடிய விதத்தில் ஒரு தீர்வு தேவையெனில் சோஷலிசம் என்பது தவிர்க்க முடியாததே. சோஷலிசம் எவ்வளவு சிக்கலான பாதையென்றாலும் அதுதான் நீதிக்கும், நியாயத்துக்கும் எம்மை இட்டுச் செல்லும் பாதையாகும்.

சில நாடுகளில் சோஷலிசம் தற்காலிகமாக தோல்வி அடைந்தால் கூட முடிவில் அதனுடைய இலட்சியம் நடைமுறைத் தன்மை ஆகியவை மீண்டும் மக்களால் உணரப்படும். வருங்காலத்தில் சோஷலிச இயக்கங்கள் கடந்த காலங்களில் ஏற்பட்ட தவறுகளில் இருந்து பாடங்களைப் படிப்பதன் மூலம் நவீனத்துவமும் முதிர்ச்சியும் உடையவைகளாக விளங்கும். இதே விதத்தில் தான் ஜனநாயகத்தின் வளர்ச்சியும் இருக்கும் என நான் நம்புகிறேன்.

14) ஒளிவு மறைவற்ற கொள்கையின் அவசியம்

---

க: வெளிநாட்டு முதலாளித்துவவாதிகளுடன் கைகுலுக்கி அவர்களை சீனாவில் முதலீடு செய்ய ஊக்குவிக்கும் அதே வேளை பூர்சுவா தாராளத் தன்மையை எதிர்ப்பது சீனாவின் முரண்பட்ட செயலல்லவா? திரு. சீ. அவர்களே இதனைப்பற்றி தங்களுடைய கருத்தென்ன?

சீ: தாராளவாதத்தை எதிர்த்தல் என்பதும் சீனாவின் ஆழமானதும் நேரடி அரசியல் முக்கியத்துவமானதொன்றாகும். இதன் மையம் நாலு அடிப்படை கொள்கைகளைச் சார்ந்துள்ளது என டெங் சியாவோ பிங் கூறியுள்ளார்.

டெங் சியாவோ பிங் அவர்களினால் கண்டு பிடிக்கப்பட்ட இந்தக் கருத்து இல்லாவிடின் சீனா அழிந்துவிடும் அல்லது வேறுபல கஷ்டங்களை அனுபவிக்க நேரிடும் என நான் எண்ணுகிறேன்.

உண்மையில் எந்த ஒரு அரசு அமைப்பும் நீதி, அரசியல் தத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். சீனாவைப் பொறுத்த வரையில் நான்கு முக்கியமான கோட்பாடுகள் தேசத்தின் ஒழுக்கம் கொள்கை ஆகியவற்றின் அடிப்படையாகத் திகழ்கின்றன. இவற்றின் அத்திவாரத்தில் தான் தற்போதைய சீன அமைப்பு விளங்குகிறது. இந்த அடிப்படையானவை கடந்த சில வருடங்களாக பாரதூரமான சவால்களை முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டதை தாங்கள் அறிவீர்கள் என நான் நிச்சயமாக நம்புகிறேன். கடந்த வருடம் சீனா பிரிவினை தேசம் தழுவிய குழப்பம் ஆகியவைகளிலிருந்து தப்பியது.

முதலாளி வர்க்கத்தினருடன் கைகுலுக்கலானது திரு. டெங் அவர்களினால் ஆரம்பிக்கப்பட்ட திறந்த கொள்கையின் நடைமுறையிலான நீடிப்பேயாகும். தொழில்நுட்பம் விஞ்ஞானம் தொழில் வளம் ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதற்கு மிகப் பெரியளவிலான முதலீடு தேவைப்படும் என்பதைக் கடந்த 200 ஆண்டுகளில் ஏற்பட்ட உலக தொழில்

படிப்பகம்

www.padippakam.com


மயப்படுத்தல் நிரூபித்துள்ளது. இதற்கான முதலீடுகளை உள்ளூர் சந்தையிலிருந்தே பெறப்பட்டால் முதலீட்டின் வளர்ச்சி ஒரு மட்டுப்படுத்தப்பட்ட வேகத்திலேயே நடைபெறும். இவற்றின் காரணமாக திறந்த கொள்கை அவசியமானது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

சு: மெஜி சீர்திருத்தத்திற்குப் பின் ஜப்பான் தனுடைய அரசியல் அமைப்புச் சீர்திருத்தத்தை நிறைவேற்றியது. சீர்திருத்தத்திற்கு முன்பே இருந்து வந்த பிரிவினைவாத உள்ளூர் ஆட்சிகளின் பிரிவினை சம்பந்தமான பிரச்சினைகளின் தீர்வைத் தொடர்ந்து அரசியல் ரீதியில் நாட்டை ஒருங்கிணைக்கும் பணி நடைபெற்றது. ஆனால் சீனாவில் கடந்த 40 வருடங்களாக ஒரு கட்சி ஆட்சியே நடைபெற்று வருகிறது. இந்த ஒரு கட்சி ஆட்சி முறை நவீன மயப்படுத்தலை தடைசெய்கின்றது.

சீ: ஜப்பான் பல கட்சி அமைப்பைப் பின்பற்றி வந்தால் கூட 1954 இல் இருந்து லிபரல் ஜனநாயகக் கட்சியின் ஆட்சியில் தான் இருந்து வருகிறது. இதுவும் 40 வருட காலத்திற்கு நீடிப்பதல்லவோ?

சு: ஆனால் லிபரல் ஜனநாயகக் கட்சியின் பல கோஷ்டிகளும் உட்கட்சி ஜனநாயகமும் உள்ளன. உதாரணமாக காகுயி தனகாவின் கோஷ்டியினர் தவறுகள் விட்ட போது இன்னொரு கோஷ்டி அதனை எதிர்த்து அக் கோஷ்டியை விரட்டவில்லையா? இது அரசியல் ஜனநாயகத்தின் கோட்பாட்டுக்கு அமைவாக இருக்கிறது.

சீ: மாவோ ஒரு முறை சொன்னார் கட்சிக்கு வெளியே வேறு கட்சிகள் உள்ளன, கட்சிக்கு உள்ளே குழுக்கள் உள்ளன என்று. இதுவும் சீன அரசியல் தான்.

மெஜி கால கட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட அமைப்பைப் போல் தற்போதைய சீன அரசியல் அமைப்பும் நல்லதல்ல என்பது உங்கள் கருத்து போல் தெரிகிறது. இரு அமைப்புகளும் மிகவும் வித்தியாசமானவை. மெஜிக்கு பல வருடங்களுக்குப் பின் ஜப்பான் இராணுவ ஆட்சியின் கீழ் வந்தது. மேற்கு நாடுகளின் தரங்களுடன் ஒப்பிடுகையில் கூட அது ஒரு உண்மையான ஜனநாயக அரசியல் அமைப்பு அல்ல. இது மிகவும் தெளிவானது.

ஆசியாவைப் பொருளாதார ரீதியில் கொள்ளையிட்டதன் மூலமும் சர்வதிகார ( ) அரசியல் அமைப்பின் கீழும் தான் ஜப்பான் தனுடைய தொழில் வள வளர்ச்சியின் முதல் கட்டத்தை நிறைவேற்றியது.

ஜப்பானியர் ஏன் புரட்சி செய்யவில்லை? ஏனென்றால், ஜப்பானியர்கள் ஒரு பலமான தேசிய உணர்வைக் கொண்டிருந்தமை அரசனின் ஆட்சிக்கும் மக்களுக்கும் இடையே நெருக்கமான தன்மை ஒன்றும் கொண்டிருந்ததுமே.

படிப்பகம்

www.padippakam.com



நவீன சீன அரசியல் அமைப்பைப் பொறுத்தளவில் இன்னும் பல தீர்வுகாண வேண்டிய பிரச்சினைகள் இருந்தாலும் கூட இதை மெஜி காலகட்டத்தில் இருந்த ஜப்பானின் அரசியல் அமைப்புக்குச் சமமாக வைக்க முடியாது. நவீன சீனாவைப் பிரபுத்துவ அரசியலைக் கொண்ட நாடு என் எப்போதும் குற்றம் சாட்டும் ஹொங்ஹொங் சக்திகளின் செல்வாக்குக்கு தாங்கள் உட்பட்டு விட்டீர்களோ என நான் அஞ்சுகிறேன். வரலாற்றில் பிரபுத்துவம் என்ற வார்த்தையில் உண்மைக் கருத்தை அவர்கள் அறியாதவர்களாக இருக்கின்றார்கள் என்றுதான் சொல்ல வேண்டி இருக்கிறது. மறுப்புக் கூற வேண்டிய அளவுக்கு அது முக்கியமான ஒரு கருத்தல்ல.

நாம் பிரபுத்துவத்தைப் பற்றி மிகவும் ஆழமாக விவாதிப்போமானால் மெஜி கால கட்டத்தில் இருந்த ஜப்பானில் சாம்ராஜ்ய அரசின் சுவடுகள் பிரபுத்துவத்தின் பலம் பொருந்திய குணாம்சங்களைக் கொண்டுள்ளன என்பதை நிரூபிக்க முடியும்.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்